இலண்டன்

# ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம்

## முதலாம் ஆண்டு நிறைவு மலர்

## 2005

முதலாம் ஆண்டு நிறைவு மலர்

1st ANNIVERSARY SOUVENIR



# SRI SELVAVINAYAGAR TEMPLE

## FIRST ANNIVERSARY SOUVENIR

299 - 303 Ley Street, Ilford IG1 4BN Tel: 020 8911 8934

# ROLEX IT SOLUTIONS

*"Giving you the peace of mind"*

- IT SUPPORT
- REPAIR & UPGRADE
- MAINTANANCE
- NETWORKING
- EPOS SYSTEMS
- SALES
- WEB DESIGN & HOSTING
- SOFTWARE DEVELOPMENT



## www.rolexitsolutions.com

**1 A Sibley Grove, Eastham, London E12 6SD**
E-mail: **admin@rolexitsolutions.com**
Fax: **0870 135 6841**

**Tel : 0208 472 2900**
**Mob: 0798 511 5397**

# DYNAMIC GLOBAL LTD

DYNAMIC GLOBAL LTD
THE EXCLUSIVE PARTNER

## VOICE OVER IP

## Internet telephony

***Unbeatable international call rates***







Residential Tariff £ 9.99/m
Business Tariff £ 18.99/m

***10p any mobile, any network, any time***

E-mail:- murali@dynamic-global.com

**www.dynamic-global.co.uk**


WE PROVIDE AIR TIME FOR CALL SHOPS

**FREE 1000 minutes Local and National calls per month**

உ

# இலண்டன்
# ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம்
## முதலாம் ஆண்டு நிறைவு மலர்
## 2005







**வேழமுகத்து விநாயகனைத் தொழ**
**வாழ்வு வாழ்வு மிகுத்து வரும்**
**வெள்ளைக்கொம்பன் விநாயகனைத் தொழத்**
**துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே!**

10 DOWNING STREET
LONDON SW1A 2AA

From the Direct Communications Office

16 August 2005

Mr S Selvarajah
London Sri Selvavinayagar Temple
299-303 Ley Street
Ilford
Essex
IG1 4BN

Dear Mr Selvarajah


The Prime Minister has asked me to thank you for your recent letter requesting a message of support for the Hindu community on the occasion of your second annual Chariot Festival.

Prime Minister has asked me to pass on his good wishes for a successful event on 21 August 2005.

Yours sincerely

M Davies

M DAVIES



உ
சிவமயம்
பிள்ளையார் துணை

சகல செல்வங்களையும் அள்ளி வழங்கும்

# இலண்டன் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்
# LONDON SRI SELVA VINAYAGAR TEMPLE

299 - 303 LEY STREET ILFORD, ESSEX IG1 4BN
WWW.SRISELVAVINAYAGAR.ORG.UK
TEL: 0208 911 8934 E-Mail: info@sriselvavinayagar.org.uk

## தலைவர் செய்தி



ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதார், ஆம் ஆட்டிவிப்பவன் அவன், ஆடுபவர்கள் நாம். எது எது எங்கெங்கு எப்பெப்ப நடக்கவேண்டுமோ அது அது அங்கங்கு அப்பப்ப நடக்கும். அவன் எல்லாவற்றையும் நடத்துகிறான், அவற்றை நடத்த எம்மைக் கருவியாகப் பயன்படுத்துகிறான்.

அதன்படி ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம் இந்த இடத்தில் அமையவேண்டும் என்பது அவரது முடிவு. அதற்கு என்னைக் கருவியாகப் பயன்படுத்தியுள்ளார். கூட்டங்கூடி நிர்வாகசபை ஒன்றை உருவாக்கி அந்த சபையில் தீர்மானம் எடுத்து மக்களைச் சந்தித்து நிதியுதவி, பொருளுதவி கேட்டு அந்த உதவி, ஆலயம் ஒன்றை உருவாக்கும் அளவுக்கு சேரும் வரை ஆறு மாதமோ, ஒரு வருடமோ, இரண்டு வருடமோ காத்திருந்து அதற்கிடையில் நிர்வாகத்துக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகள், குளப்பங்கள் எல்லாவற்றையும் தாண்டி ஒரு ஆலயம் உருவாவது என்பது இன்றைய காலகட்டத்தில் நடைமுறைக்குச் சாத்தியப்படுவது மிக மிகக் கடினம்.

அதனால் தானோ என்னவோ பெருமான் என்னை இந்தப்பணியை செய்யத் தூண்டியுள்ளார். 10 மாத காலத்திலேயே ஆலயம் நிர்மானிக்கப்பட்டு கருங்கல்லிலே திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டு 25 நாட்கள் திருவிழாவும், இலண்டனிலே மிக உயரமான 23 அடி தேரில் எம்பெருமான் வீதி உலாவந்த கண்கொள்ளாக் காட்சியைப் பக்தர்கள் காணும் பெரும்பேற்றைப் பெற்றார்கள். உலகத்திலேயே இவ்வளவு துரித கெதியில் எங்கேயும் இப்படி நடக்கவில்லை என்ற சரித்திரம் படைத்த ஆலயம் என்ற பெயரைப் பெறுகிறது. இங்கே எம்பெருமானின் அருட்பார்வையின் வேகத்தினை நான் பார்க்கிறேன்.

இவ்வளவற்றையும் செய்வித்த எம்பெருமான் இவ்வாலயம் எமது இனத்திற்கு ஒரு மையமாக அமைந்து எமது இறை உணர்வு, மத உணர்வு, கலை, கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றை வளர்ப்பதோடு உலகெல்லாம் பரந்து வாழும் எமது உறவுகளின், குறிப்பாக தாயகத்தில் அல்லலுறும் எமது உறவுகளின் துன்பங்களைக் களைய வேண்டும் என்கின்ற எண்ணத்தை என்னுள் தோற்றிவித்திருக்கிறார். எவ்வகையான இடர் ஏற்பட்டாலும், ஏற்படுத்தப்பட்டாலும் மனம் தளராது ஆண்டவன் மேல் பழியைப் போட்டு முன்னோக்கிச் செல்வேன்.

அதற்கு எமது பக்தப் பெருமக்கள் தரும் ஆதரவும், ஒத்துழைப்பும் என்னை சோர்வேற்படாமல் பார்த்துக்கொள்கிறது. இங்கே 75 வயதிற்கு மேற்பட்ட சில முதியவர்கள் ஒரு பத்து பதினைந்து பவுணைக் கொண்டுவந்து "தம்பி எடேய் இந்தாடா இதை வைத்துப் பிள்ளையாருக்கு ஏதாவது செய்யடா, நாம் இன்னும் கிடைக்கும் போதெல்லாம் கொண்டுவந்து தருவோம்". என்று சொல்லும் போது என் மனம் நெகிழ்கிறது. நான் பட்ட துன்பமெல்லாம் காற்றாய் பறந்து விடுகிறது. இலட்சக்கணக்கான பணத்தை இந்த சேவையில் ஈடுபடுத்திய எனக்கு இந்தப் பத்துப் பவுண் பெரிய உதவியாகத் தெரிகிறது. இன்னும் சிலர் மிக சந்தோஷமாக உதவி செய்கிறார்கள். அவர்கள் எல்லோரும் வரலாற்று ஏட்டில் பதிவு செய்யப்படுகிறார்கள், படுவார்கள்.

"ஆற்றும் கடமையை மறக்காதே - புயல்
காற்றும் மழைக்கும் கலங்காதே,
போற்றும் மனிதர்கள் போற்றட்டுமே - நெஞ்சில்
பொறுமையில்லாதவர் தூற்றட்டுமே".

**செல்வா**
தலைவரும் ஸ்தாபகரும்

House of Commons
London SW1A 0AA

Mr S.Selvarajah
Chair
Sri Selva Vinayagar Temple
299-303 Ley Street
Ilford
IG1 4BN

Dear Mr S.Selvarajah,

I am pleased to have the opportunity to congratulate the Sri Selva Vinayagar Temple on its First Anniversary and to send my best wishes to all those who attend the Temple and to those who worked so hard to make it a reality.

I would like to say a particular thank you to everyone at the Temple involved in raising money for the Tsunami relief efforts this year. The hard work put in by everyone made a great difference to the relief efforts and I was pleased to see the affected areas beginning to recover when I visited Sri Lanka recently.

I send my best wishes to you all.

**Gareth Thomas**
MP for Harrow West and
Parliamentary Under-Secretary of
State in the Department for International Development



## Message from the Mayor

The Mayor thanks you for your kind invitation to participate in the Chariot procession on the 21st August. Unfortunately, he will be away on holiday, otherwise he would have been very pleased to have accepted the invitation. He hopes you and all your members have an enjoyable day and that the weather is fine.

The Mayor is confident that all your arrangements to have a peaceful, enjoyable and happy day will be respected by all.

Perhaps on another occasion, if you are kind enough to invite the Mayor, I am sure that he will do his utmost to accept.

Kind greetings to all.

Yours sincerely

Councillor Charles Elliman
MAYOR



MIKE GAPES MP
LABOUR AND CO-OPERATIVE
MEMBER OF PARLIAMENT FOR ILFORD SOUTH
House of Commons
London SW1A 0AA
Tel: 020 7219 6485
Fax: 020 7219 0978
E-mail: gapesm@parliament.uk
www.mikegapes.org.uk

**Mr S Selavarajah**
**Chair**
**London Sri Selva Vinayagar Temple**
**299-303 Ley Street**
**ILFORD**
**IG1 4BN**

**10 August 2005**

**Dear Mr Selavarajah**

I am glad to be sending this message to the Sri Selva Vinayagar Temple

**The Hindu community makes a very valuable contribution to the artistic and cultural life of Ilford, Redbridge and East London. Last year I was very pleased to participate in the first Hindu Street Procession. This year, I am delighted that I am once again able to support this event which brings so much colour to the streets of Ilford South.**

**Best wishes.**

Mike Gapes

**MIKE GAPES MP**
**ILFORD SOUTH**





Cllr Thaya Idaikkadar

# *LONDON BOROUGH OF HARROW*

P.O. Box 2, Civic Centre, Harrow, Middlesex, HA1 2UH
**Tel:** 020 8424 1337 **Fax:** 020 8424 1237 **DX:** 30450 Harrow 3

Home: 13 Cambridge Road, North Harrow, Middlesex, HA2 7LA
**Tel:** 020 8427 8850 **Mob:** 07751 450 761, **Fax:** 020 8427 6041
**E-mail:** Thaya10@Aol.com

**Members**

Mr S.Selvarajah
Chair
Sri Selva Vinayagar Temple
299-303 Ley Street
Ilford
IG1 4BN

08 August 2005

Dear Mr S.Selvarajah,

I am very pleased to be sending this message to the SRI SELVA VINAYAGAR TEMPLE. The institution of the temple is the fabric of our lives. Without it we could not spread our culture. The temple does not only instill cultural traditions in children and adults alike but also brings people together to relax and forget their problems, whatever they may be, to meditate and to have peace with themselves. This temple is the result of the hard work of the President and the people around him. I have a first hand knowledge of the difficulties and the trials and tribulations the President and his close associates had to go through to make this temple a reality. I must congratulate everyone on their efforts.

I also wish well all the devotees who attend the temple and take part in temple life. An important part of the temple and Hindu beliefs is to commit itself to voluntary work and the temple's contribution during the Tsunami was outstanding.

May I finish by wishing the committee and the devotees the best for the future?

Thank you

Cllr Thaya Idaikadar

Redbridge

Members' Room

Town Hall, Ilford, Essex, IG1 1DD.

**Councillor Dr Dev Sharma B Sc (Hons) M Sc Ph D (London) AFBPS, C Psychol**

Mr Selvarajah
Temple Manager
London Sri Selvavinayagar Temple
299-303 Ley Street, Ilford
Essex IG1 4BN

8 August 2005

Dear Mr Selvarajah

I would like to take this opportunity to offer my best wishes to the temple management and indeed all the devotees on this event, which I know, is one of the most important occasions in your religious calendar. As in the previous year, I am sure it will be a grand success.

I would like to complement you and the temple management for all your hard work in developing the temple which has come to play a crucial part in your community's spiritual and cultural life.


Yours sincerely

Councillor Dr Dev Sharma



London Borough of
**Newham**

*TOWN HALL*
*London Borough Of Newham*
*Barking Road, Eastham,*
*London E6 2RP. UK.*
*Tel: 0208 5521860*
*Fax: 0208 5860869*
*Mob: 07944 312806*
*paul.sathianesan@newham.gov.uk*



*Selva Vinayagar Temple,*
*Ilford, Redbridge, UK.*

*Dear Mr.Selvarajah and family*

*Greetings from Newham Council.*

*It's a great honour and pleasure to send greetings to you and to the Devotees on your first anniversary of the Chariot Festival. Tamil Hindu Temple in Redbridge not only for our community, but also a real Blessing to the Borough and to the wider communities in Essex.*

*The Chariot festival with procession is a colourful spiritual event, also a Tamil Hindu cultural Identity with in the multicultural society in London, Iam proud to be part of this celebrations which give great spiritual values to our future generations.*

*The temple events and festivals give a spiritual leadership, love, joy and peace to our hearts and minds, especially to the expatriate Tamil community in UK. I wish to see more activities involving young people in your temple. Reaching out for social justice and freedom. Identify and promote the hidden talents, create an opportunity for active citizenship and volunteering. Your community centre should focus on education and creating awareness on anti social behaviour, to empower our young people with opportunities in life.*

*On behave of the European Tamil Community and the Council I take this opportunity to thank you, the trustees and the priest's for the great service with commitment and dedication.*

*What ever you do, in word or in deed do it in the name of LORD VINAYAGAR.*
*May the good Lord protect, guide, lead and Bless you all in every thing you wish for.*

*With Love & Prayers*

*Cllr.D.Paul Sathianesan*

2 Lancing Road
Ilford
Essex IG2 7DR
9 August 2005

Mr Selvarajah
Temple Manager
London Sri Selvavinayagar Temple
299-303 Ley Street, Ilford
Essex IG1 4BN

Dear Mr Selvarajah

I am pleased to send this message to the Sri Selva Vinayagar Temple Chariot festival.

As someone closely associated with the Panjabi Centre and, as such your next door neighbour, I have watched with interest and admiration the tremendous strides that your organisation has made in a very short time. I complement and congratulate you and the management on this fantastic achievement.

I look forward to joining you on the day.

Yours sincerely

H Rattan

Harmegh Singh Rattan MBE






# இலண்டன் ஸ்ரீமுருகன் கோயில்

LONDON SRI MURUGAN TEMPLE

*Registered Charity No:271097*

*78 Church Road, London E12 6AF*

*Entrance via Browning Road, London E12*

***Tel: 020 8478 8433*** *Fax: 020 8478 0407*




ஸ்ரீ முருகன் துணை

"கடல் கடந்தான் எங்கள் தமிழன்
அங்கும் கற்பூர ஜோதி கண்டான் இறைவன்"

என்று பாடினார் ஒரு கவிஞர். நமது இனத்தவர் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் சமயத்தையும் கலைகளையும் கலாச்சாரத்தையும் எப்போதும் மறப்பதில்லை. காலத்தின் கோலத்தினால் சிதறுண்டு வாழ்ந்தாலும் உலகெங்கும் நமது சமயம் பரவவும், வளரவும் வழிசெய்து வருகின்றோம்.

பழமையிலும் புதுமையிலும் புகழ்பெற்ற இங்கிலாந்து லண்டன் மாநகரில் கடந்த பல ஆண்டுகளாக இந்து சமயமும் தமிழர் கலாச்சாரமும் தழைத்தோங்கி வளர்ந்து வருகின்றது. இந்த வளர்ச்சியால் இங்குள்ள ஆலயங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. நாகரீக போர்வையிலே மறக்கப்படும் நமது சமய கலாச்சார உணர்வுகளை இந்த ஆலயங்கள் தட்டி எழுப்பி நமது பெருமைகளை உணரச் செய்கின்றன. ஆலயங்களும் சமயத்தொண்டு நிறுவனங்களும் இணைந்து சரியான வாழ்க்கைப் பாதையை காட்டி நம்மை நல்வழிப்படுத்துகின்றன.

இந்த வரிசையில் லண்டன் கிழக்குப் பகுதியில் இல்பேட்டில் அமைந்துள்ள ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயமும் மிக நேர்த்தியான முறையில் நடத்தப்பட்டு சமயப்பணியாற்றி வருகிறது. தொடங்கி சில ஆண்டுகளே ஆனாலும் நித்திய பூஜைகளும் திருவிழாக்களும் சிறப்பாக நடைபெறும் இவ்வாலயம் தாய் நாட்டிலும் பல தர்மகாரியங்களைச் செய்து வருகிறது.

ஸ்ரீ செல்வவிநாயகர் அருளை முன்வைத்து இத்திருக்கோவிலைச் செம்மையாக வழிநடத்தி சமயத்தொண்டாற்றி வருகிறார் இறைபணி செம்மல் திரு. செல்வராஜா அவர்கள். ஆனைமுகனின் அருள் வேண்டி அனுதினமும் பிரார்த்திக்கும் அடியார்களின் இடர் களைந்து வளம் தந்து வாழவைக்கும் ஸ்ரீ செல்வவிநாயகர் உறையும் இக்கோயில் வளர்ந்து அருள் கூடமாக திகழவும், ஐங்கரனை அர்ச்சிக்கும் அர்ச்சகர்களும் ஆலய அறங்காவலர் நிர்வாக சபையினரும் பக்தப்பெருமக்களும் பல்லாண்டு வாழ்ந்து பேரானந்தம் அடையவும் வேண்டி எல்லாம் வல்ல லண்டன் ஸ்ரீ முருகப்பெருமானை பணிந்து பிரார்த்தித்து மகிழ்கின்றோம்.



**கயிலை இராம நாகநாதசிவம்**
மற்றும் ஆலய அர்ச்சகர்கள்
லண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

உ

**'நேசத்தார் தம்பால் நிகழும் ததி நெய்போல்**
**பாசத்தாற்கின்றார் பதி'**



இறைவன் தன்னைச் சார்ந்து நிற்கும் நல்லவர்கட்கு வெளிப்பட்டு அவரையாட்கொள்ளும் அருட்திறம் படைத்தவர். கடவுள் என்ற கருணையை நினைத்து காலத்தை நினைந்து கருமம் ஆற்றும் மரபு தொடர பணி செய்த வாழ்ந்த மாணிக்கவாசக சுவாமிகள் பிறவி இடர் ஒழித்து கடவுளால் ஆளத்தகும் பக்குவம் எய்தினார். இப்பக்குவ நிலைகண்டு இறைவன் மானுடரூபம் தாங்கி வந்து குருவாகத் தோன்றினார். பக்குவம் என்பது சிவநெறியில் நின்று ஒழுகி அதன் வரம்பிலே நிற்பதனால் வினைகள் அகலகின்றன. இறைவன் திருவருளால் ஒப்பு நோக்குதல் நிகழ்கின்றன. இந்நிலையில் விருப்பு, வெறுப்பு, அற்ற வாழ்வு நிலை ஏற்படுகின்றது. இதை இருவினையொப்பு, மலபரிபாகம் என்று சைவர் பேசுகின்றனர்.

இந்நிலையை சைவர்கள் அடைய விரதம் அல்லது உபவாசம் இறைவனை நினைத்து அனுஷ்டிப்பது என்பது கடவுளையே இடைவிடாது எண்ணி "அன்னம் அடங்க அஞ்சும் அடங்கும்" என்று உணவு நியமத்தைக் கடைப்பிடிக்கின்றனர். உபவாசம் என்றால் அருகில் இருப்பது என்று பொருள். விரதம் தொடங்குமுன் சங்கல்பம் செய்வது நியமம். தர்ப்பை அணிதலும், விநாயகரை நினைத்துக் குட்டிக் கும்பிடுதலும், ஐம்புலன்களை அடக்கி மனம் உறுதியான நிலையில் நிற்பதற்கே இப்படிக் கடவுளை நினைப்பதற்கு கோயில் மக்களுக்கு அவசியம். கிராமம் தோறும் கோயில் என்ற பாங்கில் இல்பேட் பகுதி விநாயகர் ஆலயம் மக்களுக்கு அவசியமாகும். இந்தக் கோயிலின் அருட்திறத்தால் பக்தர்கள் கோயிலைச் சூழ்ந்து இறைவனுக்குக் கிட்ட அருகிலிருக்கும் மனப்பக்குவத்தைப் பெறலாம்.

சைவம் என்பது சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டாலும் அறுசமய ஒற்றுமைப்பாட்டில் விநாயகருக்கு முதல் வணக்கம் என்ற பக்குவத்தில் வழிபாடு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எனவே பல திருவுருவங்களை வழிபட்டாலும் பல நாமங்களைச் சொல்லி அர்ச்சித்தாலும் எல்லாம் சிவப்பரம்பொருளே என்பது சைவசமயக் கருத்து. விநாயகரை இஷ்ட தெய்வமாகக் கொள்வோருக்கு இல்பேட் விநாயகர் ஆலயம் தெய்வீக வாழ்க்கை வழிபாட்டிற்கு இன்றியமையாததாகும்.

விநாயகருக்கு உகந்த விரதங்களை அனுஷ்டித்து சைவவாழ்வு வாழ்வோருக்கு ஆவணி மாதத்தில் வளர்பிறையில் வரும் விநாயக சதுர்த்தி, மாதந்தோறும் வரும் சதுர்த்தி, பிள்ளையார் நோன்பு, (கார்த்திகை மாத தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை சஷ்டிவரை இருபத்தியொரு நாள் விரதம்) சங்கடகட சதுர்த்தி, ஆடிமாத வெள்ளிக்கிழமை, தைமாத செவ்வாய்கிழமை முதலிய நாட்களில் விரதம் அனஷ்டிப்பவர்களுக்கும் இக்கிராம பக்தர்களுக்கும் சைவ சாதனை செய்து வாழ உகந்ததாகும்.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் வணங்குவது உன் மலர் தாழ் என்பது எழுதாமறை. கடவைள வணங்குவதற்கு நாட்களும், நட்சத்திரங்களும் நியமித்து அந்த நாட்களில் மாத்திரம் வணங்கும் சமய கொட்பாடு ஒழிந்து, தினமும் காலையிலும் மாலையிலும் கடவுள் அடிபணிந்து இறைவன் புகழ்பாடி வணங்கும் நிலை சைவர்கள் மத்தியில் உருவாக வேண்டும். சைவ உலகத்தில் நவராத்திரி, சிவராத்திரி. தைப்பொங்கல், வருஷப்பிறப்பு என்பவற்றிற்குப் புண்ணியகாலம் என்று நேரம் காலம் பார்த்துத்தான் வழிபாடு செய்யும் சைவமுறை சரியா என்று சிந்திப்போமாக. ஒரு கணக்கிற்கு ஒரு மறுமொழிதான் சரியாக இருக்கும். ஏன் கணக்குப் பிழை ஏற்பட்டு வழிபாட்டு நேரங்களைப் பற்றி அரட்டிக் கொள்கிறார்கள். நாளும் கோளும் சரியில்லாக்காலங்களில் வழிபாட்டைக் கடவுள் ஏற்க மறுப்பாரா?

கோயில்களில் ஒரே நேரத்தில் சமூகமாக ஒன்றுகூடி வணங்கி கோயில்கள் சமுதாய மையங்களாகி சைவமக்கள் ஒற்றமை வளர கோயில்கள் மையங்களாக வேண்டும்.

இல்பேட் விநாயகர் ஆலய சுற்றுச் சூழலில் வாழும் சைவமக்களுக்கு சைவமுறையில் வழிபாடு செய்து அவர்தம் ஆன்ம ஈடேற்றத்திற்கு உகந்த நிலையமாக இயங்க திருவருள் பாலிப்பதாக. இந்தக் கோயில் ஸ்தாபகர்கள், பணிபுரிபவர்கள். பக்தர்கள் எல்லோரும் சகல செல்வ யோகமிக்க ஆன்மீக பெருவாழ்வுடன் வாழ்ந்து நித்தம் தொழுவோருக்கு நிறைவு கொடுத்து தஞ்சம் அடையும் அடியவர்களுக்கு வாழ்வு கொடுக்கும் திருக்கோயிலாக நீடுழி வாழிய வாழியவே.

வ. செல்லத்துரை
தலைவர்
உயர்வாசல்குன்று முருகன் ஆலயம்
ஆர்ச்சே லண்டன்.

# இலண்டன் மாநகரில் இல்போட் நகரில் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீ செல்வவிநாயகர் திருவருள் போற்றி போற்றி



சீரூத்த யாழ்ப்பாணச் செழும்பதியின்
செந்தமிழின் சைவத்தின் மாண்பையெல்லாம்
பேர் பூத்த பெருநகரம் இது என்று
புகழ்பூத்த லண்டன் மாநகரில் சென்று
ஊர் போற்ற உலகோர் ஏற்ற
உவந்து பல தொண்டு செய்யும்
பார் போற்றும் பக்திநிறை தொண்டரிவர்
பருதியென பல்லாண்டு நிலைத்து வாழி

தெய்வீக ஒளி வீசப் பூசை செய்து
செப்பரிய "கும்பிளாவளை" தன்னை
தூய்மையுடன் இதயம் தன்னில்
துலங்கிடும் "சந்திரன்" குருக்களாரும்
வையகத்து வாழ்ந்த ஔவை தன்னை
வானுலகில் பூசிக்க வைத்த வள்ளல்
வைதீக நெறி முறைகள் பரவிமேவ
வளமேவு இல்பேட்டில் இருக்கவைத்தான்

செய்வதனைச் சிறப்பாகச் செய்யும் தீரன்
திருநிறை விநாயகனை மனத்தில் ஏற்றி
ஐயன் கும்பளாவளையானை எண்ணி நாளும்
அகமகிழ பூசிக்கும் செல்வராசன்
தெய்வீகப் பணிகள் பலவும் செய்து
சீர்மேவு சைவத்தை காப்பாய்நீடு
வையத்தில் தமிழ் சைவம் ஓங்கவேண்டில்
வாலிபரை திரட்டி நீர் செயலில் இறங்கிடும்

அறநெறியை ஒருநாளும் மறந்திடாதீர்
ஆன்மீக உணர்வதனை கைவிடாதீர்
பிறமதத்து மாயையிலே சிக்கி நீவீர்
பெருமை மிகு சைவத்தை மறந்திடாதீர்
உறவினரை உற்றாரை கூட்டிவந்து
உவந்துதினம் சிவதியானம் செய்வீராகில்
கறைபடியா வாழ்வதும் மலர்ந்து பொங்க
காணலாம் ஈசனவன் பாதந்தானே

மதிஞானம் செல்வமெலாம்
மகிழ்வுறவே தளைத்து ஓங்க
அதிஉயர்ந்த சைவத்தின் மேன்மையெலாம்
அண்டகுலமனைத்துமே பரவி ஓங்க
விதிவசத்தால் இலண்டன் வந்து சேர்ந்தோர்
விதிமுறைகள் தப்பாது எம்மதத்தைப் பேண
நதிபாயும் சடை ஈசன் பாதமதை
நாளும் மறவாது அன்பர் போற்றி
கதியீசன் பொற்பாத மொன்றே யென்று
கண்ணீர் சொரிந்தவனை நினைந்து வாழி

ஆக்கம் --

**அளவையூர் மு. திருநாவுக்கரசு** J.P
(ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி)

*"Ammanai Saran Addainthal Athika Varamperalam"*

**SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

*5, CHAPEL ROAD, LONDON. W13 9AE.* TEL: 0208 - 810 0835

Charity No: 1014409 0208 – 840 0485

**BOARD OF TRUSTEES**

**Chairman**
Mr A Thevasagayam

**Vice Chairman**
Mr S Premachandra

**Secretary**
Mr R Kanesharajah

**Joint Secretary**
Mr T Thevarajan

**Treasurer**
Mr S Abayalingam

Dr V Paramanathan

Mr P Ramachandran

Mr S Sri Rangan

Mr P Theivendram

**Bankers**

Lloyds T S B
High Street
Uxbridge

**Solicitor**

Mrs G Kathirgamanathan
72 Chestnut Drive
Pinner
Middx

உ

கணபதியென்றிடக் கலங்கும் வல்வினை
கணபதியென்றிடக் காலனும் கைதொழும்
கணபதி யென்றிடக் கருமமாதலால்
கணபதி யென்றிடக் கவலை தீருமே.

ஆதி சங்கரனார் ஆரம்பித்து வைத்த சன்மத மதங்களை அறநெறி வழியில் உலகில் இந்துக்கள் எங்கு வாழ்ந்தாலும் எமது சமயத்தையும் கலாச்சாரத்தையும் இரு கண்களாகப் பேணிக் காக்க கோவில்கள், சமய நிறுவனங்கள் தோன்றின. இவ்வகையில் கோயில் இல்லா உரில் குடியிருக்க வேண்டாம் என்னும் ஔவைப்பாட்டியின் அருள் வாக்கிற்கிணங்கவோ என்னவோ உலகின் பழம் பெரும் நாடுகளில் புகழ் பெற்று விளங்கும் லண்டன் மாநகரத்தின் கிழக்குப் பகுதியில் விக்கினங்களை நீக்கி வெற்றி அடையச் செய்யும் வினாயகனுக்கு ஆலயம் அமைக்கும் எண்ணம் அடியார் செல்வா மனதில் தோன்றியது வினாயகப் பெருமானின் மகிமையன்றி வேறேதுமில்லை.

இவரது கனவு நனவாக ஸ்ரீ செல்வ வினாயகர் என்னும் அழகிய ஆலயம் அமைந்து வழிபாடுகள் சிறப்பாக நடாத்தி வந்து ஓராண்டு விழாவைக் கோலாகலமாக நிகழ்த்துவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

இவ்விழா சிறப்பாக நடை பெற எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை அம்பாள் அருட் கடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்திக்கின்றோம்.

'மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்'

அப்பையா தேவசகாயம்
தலைவர் தர்மகத்தா சபை
தலைவர் உலக சைவப் பேரவை பிரித்தானியக்கிளை



101 Drake Road
Harrow
Middx
HA2 9DZ

தலைவர்
செல்வவிநாயகர் ஆலயம்
இல்பேட்

இல்பேட் பகுதியில் அமைந்து பக்தர்கட்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் செல்வ விநாயகர் ஆலயத்தின் இரண்டாவது ஆண்டு மகோற்சவம் சிறப்பாக நடைபெறுவது நடைபெறுவது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். விநாயகப்பெருமானின் அருள் எல்லா மக்களையும் சென்றடையப் பிரார்த்திக்கின்றேன.

இலண்டன் மாநகரத்தில் அமையப்பெற்று பல்வேறு சமூக சமயப் பணிகளை ஆற்றிவரும் ஈலிங் கனக துர்க்கையம்மன் ஆலயத்தின் சேவைகளையும் அவ்வாலயத்தின் சமூக சமயப் பணிகளையும் சிறப்பாக நடைமுறைப்படுத்த தாங்கள் ஆற்றிய ஒத்துழைப்பினையும் ஆலோசனைகளையும் நான் என்றும் நினைவில் கொள்கின்றேன்.

இல்பேட் பகுதியில் அமைந்திருக்கும் ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம் அப்பகுதியில் உள்ள மக்களுக்கு அப்பிரதேசத்தினை அண்டிய பகுதிகளில் வாழும் மக்களுக்கும் நல்ல ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்து ஈலிங் கனக துர்க்கையம்மன் ஆலயம் போல் இல்பேட் செல்வவிநாயகர் ஆலயமும் விளங்கும் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு.

அத்துடன் நிற்காது இளைய தலைமுறையினர் ஆலயம் சென்று வழிபடும் வகையில் அவர்களையும் ஆலயப் பணியில் முன்னிலைப்படுத்தி, தொண்டுகளிலும், பஜனைகளிலும், தேவார திருப்பதிகங்கள் ஓதுதல் ஆகியவற்றில் பெரும் பங்கு எடுக்க வைத்தல் போன்றவற்றை முன்னெடுத்துச் செய்ய வேண்டும்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சொ.கருணைலிங்கம்



உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

**தெல்லிப்பழை, இலங்கை.**

# Sri Durgadevi Devasthanam

**Tellippalai, SriLanka.**

*தலைவர்:*
துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி,
**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P.**

**President:**
Durgaduranthari, Sivathamilselvi,
**Dr. Miss. Thangamma Appacuddy, J.P.**

## இலண்டன் ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம்

## மகாகும்பாபிசேகச் சிறப்பு மலர்



## வாழ்த்துரை

உள்ள மென்னுங் கூடத்தில்
ஊக்கமெனுந்தறி நிறுவி உறுதியாக
தள்ளரிய அன்பெனும் தொடர் பூட்டி
இடைப்படுத்தி தனுகட் பாசக்
கள்ளவினை பசம்போதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யெனும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்து வருவினைகள் தீப்போம்.

விநாயக வழிபாடு இன்று உலகநாடுகளிலும், நகரங்களிலும், மற்றும் மூலை முடுக்குகள் தோறும் பல்கிப் பெருகி இருப்பதை நாங்கள் அனைவரும் அறிவோம். சைவ மக்களுக்கு முதல் வணக்கத்திற்குரிய பெருமானாக விநாயகர் விளங்குகிறார். எதற்கெடுத்தாலும் "பிள்ளையாரே; பிள்ளையாரே என்று வழிபட்டு எக்கருமங்களையும் ஆரம்பிப்பது எமது வழக்கம். பெருமான் நினைப்பதற்கு அரியவர். ஆனால் வழிபடுவதற்கு எளியவர். சாணி உறுண்டையிலும், மஞ்சல் மாவிலும் எமது அன்பினை ஏற்றுக் குந்தியிருந்து அருள்பாலிப்பவர் இவரே.

திருக்கோயில்களாலும் வழிபாட்டு ஒழுங்கினாலும் இன்று முன்னணியில் விளங்குவது இலண்டன் மாநகரமாகும். சிறியனவும் பெரியனவுமாகிய கோயில்கள் பலவற்றை இங்கு நிர்வகித்து வருகிறார்கள். அவற்றில் ஒன்று தான் இலண்டன் ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயமாகும். இங்கு 4.2.2004 புதன்கிழமை குடமுழுக்கு செய்யப்பட்டது. எமது மண்ணில் சிவாச்சாரியப் பெருமக்களால் எவ்வாறு கி
ரியைகள், உற்சவங்கள் குடமுழுக்குகள் ஒழுங்காக நடைபெறகின்றனவோ அதே பாணியில் இலண்டன் மாநகரிலும் சைவசமய விழாக்கள் நடைபெற்று வருவதை நாம் நன்கு அறிவோம். செல்வம் கொழிக்கும் அந்நாட்டில் பக்திக்கும் பண்பாட்டிற்கும் எவ்வித குறையுமில்லை. அந்த வகையில் மேற்படி செல்வ
விநாயகர் ஆலயமும் சிறந்த நிர்வாகத்தைக் கொண்டுள்ளது. தமது உத்தியோகக் கடமைகளின் மத்தியிலே ஆலயக் கடமைகளையும் செவ்வனே நிறைவேற்றி வருகிறார்கள் என்பது கண்கூடு. குடமுழுக்கு விழாவில் பிரதம குருவாக இருந்து கடமையாற்றிய சிவஸ்ரீ. விஸ்வேஸ்வர சிவாச்சாரியார் அவர்கள் எங்கள் ஆலயத்தோடு நீண்ட நெடிய தொடர்பு கொண்டவர். விநாயகனுடைய அருள்வளமும் குரல்வளமும் நிரம்பப் பெற்றவர். "அந்தணர் என்போர் அறவோர்" என்றும்,

கரிய மாலினும் கண்ணுதலானினும்
உரிய தாமரை மேலுறை வானினும்
விரியும் பூதமோர் ஐந்தினும் மெய்யினும்
பெரியர் அந்தணர் பேணுதி உள்ளத்தால்"

என்பது வசிட்ட முனிவர் இராமபிரானுக்கு உணர்த்திய அறிவுரையாகும். எனவே ஆலயங்களைப் பேணுவோம். அறச்சாலைகளை அமைப்போம். அந்தணர்களை மதிப்போம் என்று கூறி விநாயகனுடைய அருளால் இவ்வாலயம் மேன்மேலும் ஓங்கி உயர வேண்டும் என்று பிரார்த்தித்து அமைகின்றேன்.

**கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி**
சமாதான நீதிபதி
தலைவர் ஸ்ரீ. துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை ஸ்ரீ லங்கா

உ

# விநாயக வணக்கம்

திருக்கோவில்களுக்குப் போனால் நாம் முதலில் வணங்குவது விநாயகப் பெருமானை விநாயகர் திருவுருவில் தேவர், மனிதர், விலங்கு, பூதம் போன்ற பல்வேறு உயிரினங்களின் வடிவங்களை அவதானிக்கலாம். உலகத்து உயிர்கள் யாவற்றுக்கும் மூலாதார மூர்த்தி இவரே என்பது இதனால் தெளியப்படும். விநாயகர் திருவுருவைச் செய்வதற்கு பொன்னோ, வெள்ளியோ, ஐம்பொன்னோ தான் வேண்டும் என்பதில்லை. மண்ணாலும், பச்சரிசி, மஞ்சள் பொடி, பசுவின் சாணம் கூட அவர் திருவுருவை ஆக்குவதற்குப் போதும். அவரை எழுந்தருளப் பண்ணும் இடந்தானும் ஆற்றோரம், அரசமர நிழல், நாற்சந்தி போன்ற எளிமையான இடங்களே. உகந்த அர்ச்சனைப் பொருள் வெகு இலகுவில் கிடைக்கும் அறுகம்புல். அவருக்கான நிவேதனப் பொருட்கள், கனிவகை, அப்பம், அவல் பொரி, மோதகம் ஆதியன. அவருடைய பேழைவயிறு சகல அண்டங்களும் அவரிடத்தே அடங்கி உள்ளமையைக் காட்டும். கையிலுள்ள மோதகம் எமது பசுபோதம். வைத்துள்ள அங்குசம் யானையை அடக்கும் ஆயதம். யானை முகம் கொண்ட தம்மைத் தாமேயன்றி வேறு யாரும் அடக்க முடியாது என்பதை உணர்த்தும். தமக்கு மேல் ஒரு நாயகர் இல்லாமையால் அவர் விநாயகர் எனப்படுவார்.

சிவன் கோவிலானாலும், அம்பாள் கோவிலானாலும், முருகன் கோவிலானாலும் முதற்பூசை விநாயகப் பொருமானுக்கே, எந்தக் கோவிலுக்குப் போனாலும் நாம் முதலில் வணங்க வேண்டியவர் விநாயகக் கடவுளே. அப்பெருமானை வணங்க வேண்டிய முறை பற்றிப் புராணங்கள் கூறுகின்றன. கைகள் இரண்டையும் முஷ்டியாகப் பிடித்து தலைக்கு மேல் உயர்த்தி நேரே இறக்கி நெற்றியில் குட்டுவது அல்லது முஷ்டியாப் பிடித்த கைகளை மாற்றிப் பிடித்து நெற்றியில் குட்டுவது அதன் பின் இடது கையால் வலது காதையும், வலது கையால் இடது காதையும் பிடித்துக் கொண்டு சந்நிதானததில் இருந்து எழும்புதலாகிய தோப்புக் கரணம் போட்டு வணங்குதல். இவ்வாறு குட்டிக் கும்பிடும் முறை விதிக்கப்பட்டுள்ளது. புராண வரலாற்றைப் பார்க்கலாம்.

மதங்கமாபுரி என்ற நகரில் கயமுகாசுரன் என்பவன் அரசாண்டு வந்தான். அவன் சிவபிரானை நோக்கித் தவம் செய்து தேவரும், மற்றும் யாவரும் தன்னை எதிர்த்துப் போரிட்டாலும் தானே வெல்லவும், எதிரிகள் விடுக்கும் எந்த ஆயுதத்தாலும் தான் சாவாதிருக்கவும் வரம் பெற்றான். அதன் பின் அவன் தேவேந்திரனை வென்று தேவர்களைத் தனக்கு அடிமையாக்கினான். அவர்கள் தான் இடும் பணிகளைச் செய்யு முன்பு தன் முன்னிலையில் முஷ்டியாகப் பிடித்த கைகள் இரண்டையும் மாற்றி தலைக்கு மேல் உயர்த்தி, பின் இறக்கி நெற்றியிலே குட்டி, தோப்புக்கரணம் போட்டு வணங்க வேண்டும் எனக் கட்டளை இட்டிருந்தான். இவ்வாறே ஒழுகிய தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டு தாங்கள் படும் துன்பத்தை நீக்கும் படி இரந்தனர். சிவன் விநாயகப் பெருமானை உற்பவித்து, கயமுகாசுரனைச் சங்கரித்து, தேவர்களுக்கு அருள் செய்யுமாறு அனுப்பினார்.

விநாயகர் அசலன் என்பவனது தோள் மீதேறி பூதசேனைகள் சகிதம் போருக்குப் போனார். போரில் அசுர சேனைகளைப் பாசத்தினால் கட்டி கணிச்சியினால் கொன்றொழித்தார். கயாமுகாசுரன் மீது அவர் விடுத்த எந்த ஆயுதமும், அவன் பெற்றிருந்த வரம் காரணமாக, அவனைப் பாதிக்கவில்லை. இதனால் விநாயகர் தமது தந்தங்களில் ஒன்றை முறித்து அவன் மீது விடுத்தார். அது அவன் மார்பைப் பிளந்தது. தேர் மீது சாய்ந்தான். இறவாத நிலையில் ஒரு பெருச்சாளி வடிவு கொண்டு பெருமானை எதிர்த்தான். அவ்வளவில் அவன்மீது எம்பெருமானின் அருட்கண் பார்வை விழ அவன் தன் ஆணவம் நீங்கப்பெற்றான். விநாயகர் அப்பெருச்சாளியைத் தமது வாகனமாக்கிக் கொண்டார். தேவர்கள் துன்பங்கள் யாவும் நீங்கின. அவர்கள் இது நாள் வரை தாங்கள் அசுரன் முன் செய்த வணக்கத்தைப் பெருமான் திருமுன் செய்வதாகவும் அவ்வாறே வணங்கும் அன்பர்களின் துன்பங்களைப் போக்குமாறும் வேண்டிக்கொண்டான்.

இன்னும் ஒரு வரலாறு

பொன்னி நீரைக் கமண்டலத்தில் கொண்டு அகத்திய முனிவர் தென்னாடு நோக்கி வந்தார். சீகாழியில் சிவபூசை செய்து கொண்டிருந்த இந்திரன் வரட்சி காரணமாக புட்பங்களுக்குத் தட்டுப்பாடு கண்டு விநாயகரைப் பூஜித்தான். அவர் பொன்னி நதியை அங்கு பாயும்படி செய்ய வேண்டுமென இரந்தான். பெருமான் சம்மதித்தார். அகத்தியர் அவ்விடம் வந்து கமண்டலத்தை ஓரிடத்தே வைத்து சந்தியா வந்தனம் செய்து கொண்டிருக்க, விநாயகர் ஒரு காக்கை வடிவில் கமண்டலத்தில் வீற்றிருந்தார். அது சாதாரண காகம் என நினைத்த அகத்தியர் கையை உயர்த்தி காகத்தைக் கலைத்தார். காகம் கமண்டலத்தைக் கவிழ்த்துவிட்டுப் பறந்தது. பொன்னி நீர் ஆறாகப் பெருகி ஓடியது. கோபம் கொண்ட அகத்தியர், பிராமச் சிறுவனாய் மாறிய காகத்தைக் குட்டுவதற்காகத் துரத்திய போது அங்கு விநாயகப் பெருமான் தமது திருவுருவைக் காட்டினார். அகத்தியர் தமது தவறை உணர்ந்து சிறுவனைக் குட்டுதற்கு முட்டியாகப் பிடித்த தமது கையைத் தலைக்கு மேல் உயர்த்தி நேரே தமது நெற்றியில் இடி இறக்குவது போலக் குட்டி மன்னிக்க வேண்டினார். அத்தோடு பெருமானை இவ்வாறு குட்டி வணங்குவொருக்கு அருள் புரியுமாறும் கேட்டுக்கொண்டார்.

இவ்வாறு கைகளை மாற்றிப் பிடித்துக் குட்டுவதும், நேரே குட்டுவதும் விதியாயின.

**வ.இ.இராமநாதன்**

# டாக்டர் துரை அவர்களின் ஆசி

அன்பான ஸ்ரீ செல்வவிநாயக அடியார்களே! என் பெயர் டாக்டர் துரை. எனது மனைவியும் ஒரு டாக்டர். எனது மகள் ஒரு டாக்டர். எனது மருமகன் ஒரு கலெக்டர். அப்படியிருக்கும் போது நான் எப்படி? ஏன்? திரு செல்வா ஐயா அவர்களோடு இரண்டு வருடம் வேலை செய்தேன்.

அவருடைய தொழில் ஸ்தாபனத்தில் 6 மாதமும் ஆலயத்தில் ஏறத்தாள ஒன்றரை வருடங்களும் வேலை செய்தேன். எனக்குள்ளே நான் சிந்தித்தப் பார்த்தேன். எனக்குக் கிடைத்த விடை. ஆம் என்னுடைய ஊர் திருச்சி. திருச்சியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் உலகப்பெற்ற உச்சிப்பிள்ளையார் என்னை அனுப்பியிருக்கிறார். எனது பக்தன் இலண்டன் மாநகரில் எனக்கு ஒரு கோயில் கட்டப் போகிறான். நீ அங்கே போ. அவனுக்கு உனது உதவி தேவைப்படும் என்று என்னை அனுப்பி விட்டிருக்கிறார். ஆண்டவன் எப்போதும் தனது வேலைகளை ஒவ்வொருத்தர் மூலமாகத்தான் செயல்படுத்துகிறார்.

அதே போலத்தான் விநாயகப்பெருமான் தான் இல்பேட்டில் அமர்ந்து அங்குள்ள மக்களுக்கு அருள் பாலிக்க வேண்டும் என்று முடிவெடுத்து அதற்கான தகுதி வாய்ந்த ஒரு பக்தனைத் தேடும் போது திரு. செல்வா ஐயா அவர்கள் தான் இதற்குப் பொருத்தமானவர் என்று நினைத்திருப்பார்.

ஆம். கோயில் அமைப்பதற்குரிய எல்லாத் தகுதியும் திரு. செல்வா ஐயாவிடம் இருப்பதை நான் அவருடன் பழகிய காலங்களில் அறிந்து கொண்டேன். நுான் அவரைப்பார்த்த முதல் நாளே சொல்லி விட்டேன் நீங்கள் வெகுசீக்கிரம் ஆன்மீகத்தில் மிக ஈடுபாடு கொண்டு இறைவனுக்கு ஒரு ஆலயமே அமைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. எனக்கு ஒருவருடைய முகத்தைப் பார்த்து அவரது தகுதியையும், குணாதிசயத்தையும் கூறும் சக்தி உண்டு.

அவருடைய கையைப் பார்க்காமலே நான் சொன்னேன் உங்களுடைய கைரேகையில் ஒரு வேல் இருக்கிறது. நீங்கள் யாருக்கும் பயப்படத்தேவையில்லை. உங்கள் தர்மகாரியங்களுக்கு யார் குறுக்கே வந்தாலும் அந்தச் சக்திவேல் உங்களைக் காப்பாற்றும் என்று. அதேபோல் அவருக்கு வந்த சோதனைகள் வேதனைகள் சாதாரண மனிதர்களால் நினைத்துக் கூடப் பார்க்கமுடியாது. கடந்த இரண்டு வருடங்களிலும் அவருடன் இருந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அதர்மத்தைக் கண்டால் அதை எதிர்க்கும் அசாத்திய துணிச்சல் அவருக்குண்டு. அது யாராக இருந்தாலும் கவலைப்பட மாட்டார். அதனால் உயிரே போவதென்றாலும் வருந்தமாட்டார். நான் பொய் சொல்லவில்லை. எல்லாவற்றையும் நான் நேரில் கண்டவன்.

தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்கும் பொழுது அங்கே ஆண்டவன் அவதரிப்பான். அதேபோல் அதர்மத்தை அழித்து தர்மத்தைக் காக்க அந்த செல்வவிநாயகர் தேர்ந்தெடுத்தவர் ஒரு தர்மவானே.

இந்த அலயம் கூடிய சீக்கிரம் மிகப்பிரபல்யம் அடையும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இந்த ஆலயம் உள்ளவரை செல்வா ஐயாவின் பெயரும் புகழும் நிலைத்திருக்கும். இது இறைவனின் கணக்கு தப்பாது. நான் எமது அடியவர்களிடம் வேண்டுவதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். செல்வா ஐயா மனம் வருந்தும்படி நடந்து கொள்ளாதீர்கள் அவ்வளவுதான்.

எல்லாம் நல்லபடியே நடக்கும் எல்லோரும் வாழ்க.

நன்றியுடன்,
டாக்டர் துரை

# ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
## SRI NAGAVARATHA NARAYANAR THEVASTHANAM

**அருட்கவி சீ. விநாசித்தம்பி** M. A.
ARUDKAVI S. VINASITHAMBY M. A.

நாகேஸ்வரம், NAKESWARAM.
அளவெட்டி, ALAVEDDI.
(இலங்கை) (SRI LANKA)

தொலைபேசி ; 070-212896

# நல்விளக்காய் விளங்கவைப்பாய்

திருவளரும் இங்கிலாந்து தேசந்தன்னில்
சீர்வளரும் அருள் இல்பேட் பதியில் மேவும்
கருவளரும் செல்வவிநாயகரே நின்றன்
கதிவளரும் பணியாற்றும் தொண்டர் கூட்டம்
குருவளரும் பூசை செய்வோர் பணிவோரெல்லாம்
குணம் வளரும் சுகம் சிறந்து வளம் சிறந்து
தரு வளரும் கொடை சிறந்து தொழில் சிறக்க
தவம் வளரும் நின்கருணை புரிவாய் போற்றி.

நல் வரங்கள் பல கொடுத்து மேன்மேல் உன்றன்
ஞானவழி காட்டி அருள் பொழிந்து நிற்கும்
செல்வவிநா யகத்துரையே நின்றாள் போற்றும்
சீரடியார் தமைக்காக்கும் தேவ தேவா,
சொல் விளங்கும் நின்கருணைப் புகழ் செழிக்கத்
துதிமலராய் மலர்கின்ற விழாமலர், வான்
நல்விளக்காய் விளங்கவைப்பாய் லண்டன் மேவும்
ஞானமகா கணபதியே போற்றி போற்றி.

கலாநிதி,
அருட்கவி,
சி. விநாசித்தம்பி M.A

## NAMAMI VIGHNESHWARA PADA PAKAJAM

The Selva Vinayakar Temple on Ley street, Ilford is an oasis of peace in a busy road. The beautiful Vigraha of Vinayaka is flanked by images of Amma, Guruvayar, Aiappa, Balaji with his consorts of Padmavati and Sri Alamelu mange, Murugan with Sri Valli and Devayani and in front the very essential Navagrahas.

The organisation of Archanas and Abisekhara is superb and the whole place is pervaded by a sense of peace, sancitity and order.

Sri Raja Dorai has rendered unstited support and his 'bhakthi' has been a sustaining and inspiring force.

The local community is becoming aware of the presence of this extra ordinary 'jewel'. Its sanctity like a magnet draws people to visit the temple and offer worship to the beautiful deity.

A Temple is the centre of religious social and cultural life. We hope people will use this beautiful venue and will come regularly and form a part of the satsangh which can make such places grow prosper and serve the community.

***Shakuntala Char***


# MAHAAN CUISINE

**SRI LANKAN & SOUTH INDIAN EAT IN OR TAKE AWAY**

**We offer complete catering services for**

*** Wedding * Birthday Parties * Arangetrams**

*** Conference * Sports Festivals**

*** Anniversaries * Special Occasions**

**331 Ley Street**

**Ilford Essex**

**Tel: 020 8478 0789**

இலண்டன்

# ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம் அமைந்த வரலாறு



கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம். என்ற அந்தத் திருவாக்கிற்கேற்ப இங்கிலாந்து தேசத்திலும் இலண்டன் மாநகரில் பல கோயில்கள் இருந்தாலும் சைவத் தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற றெட்பிறிச் (Redbridge Borough) என்கின்ற எமது ஊரிலே எமக்கு என்றொரு கோயில் இல்லாத குறையை நீக்குவதற்கும், எமது சிறார்களை பக்தி மார்க்கத்திலும், ஆன்மீக ஒழுக்கத்திலும் இருந்து விலகிச் செல்லாமல் பாதுகாப்பதற்கும் எமக்கு ஒரு ஆலயம் கண்டிப்பாக வேண்டும் என்கின்ற பல வருடக் கனவை நனவாக்க எழுந்தருளியது தான் இலண்டன் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் ஆகும்.

ஈழமணித் திருநாட்டின் வடபால் கலைக்கும், கல்விக்கும் பேர் போன இடமான அளவெட்டி என்கின்ற அழகிய கிராமத்திலே கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்து வந்த குடும்பத்தில் உதித்த செல்லத்துரை செல்லம்மாள் தம்பதிகளின் மகனான திரு செல்வா என்றழைக்கப்படும் செல்வராஜாவினால் அவரது சொந்தச் செலவில் 2003 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ம் திகதி இந்தச் செல்வ விநாயகர் ஆலயம் கட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டு 2004ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ம் திகதி மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

தலைவருடைய மதிநுட்பத்தாலும், விடாமுயற்சியாலும், துணிச்சலாலும் மேற்படி ஆலயம் மிகக் குறுகிய காலத்தில் கட்டிமுடிக்கப்பட்டாலும் அதற்குப் பின்னால் பலருடைய ஊக்கம், ஒத்துழைப்பு, போராட்டங்கள், அர்ப்பணிப்புக்கள், தியாகங்கள், விடாமுயற்சிகள் இந்த முயற்சி வெற்றியழிக்க காரணமாக இருந்ததை மறக்க இயலாது.

முதலாவதாக திரு. செல்வா அவர்களின் குடும்பத்தாருக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். நான்கு பிள்ளைகளும் தாயும் வசதியாக இருக்க ஐந்து அறைகொண்ட பெரிய வீடொன்று வாங்குவதற்கான ஆயத்தங்கள் முடிந்து பணம் ஆயத்தமாக இருந்த நேரம் தான் ஆலயம் கட்டுவதற்கான இந்த இடம் விலைக்கு வந்தது. இப்போ வீடா? ஆலயமா? என்ற நிலை உருவாகியது. இந்த நிலையில் தகப்பனாருடையதும், கணவருடையதும் மனநிலையைப் புரிந்துகொண்ட பிள்ளைகளும் மனைவியும் பப்பா; இந்த வீடு இல்லாவிட்டால் வேறு வீடு எப்பவும் வாங்கலாம், ஆனால் கோயில் கட்டுவதற்கு நல்ல இடம் என்று சொல்லுகிறீர்கள் இந்த இடம் போனால் மீண்டும் இப்படி ஒரு இடம் கிடைக்கிறது கஷ்ரம் என்று சொல்லுகிறீர்கள் ஆகவே வீடு இப்போ வாங்க வேண்டாம் பப்பா. உங்கள் விருப்பப்படி கோயிலைக் கட்டுங்கோ என்று சொல்லி விட்டார்கள். இந்தச் சின்ன வயதிலே தங்களுடைய சொகுசு வாழ்க்கையையும் ஆசாபாசங்களையும் தியாகம் செய்து விட்டு தந்தையாரின் மனம் கஷ்ரப்படக்கூடாது என்று நினைத்த மனைவியினதும் பிள்ளைகளினதும் தியாக உள்ளம் வேறு யாருக்கு வரும். அவர்களுடைய அந்தத் தியாகம் தான் இன்று எமக்கு இந்த ஆலயம் கிடைத்திருக்கிறது.

இந்த இடத்தை எடுக்கும் போது பல சிக்கல்கள். சிலர் இடத்திற்குப் போட்டி போட்டார்கள். அவர்களிடம் செல்வா அண்ணர் சொல்லிவிட்டார் இந்த இடம் நான் கோயில் கட்டுவதற்காக எடுத்திருக்கிறேன் யாரும் போட்டி போட வேண்டாம். மிஞ்சிப் போட்டி போட்டால் என் சொத்தெல்லாம் விற்றென்றாலும் நான் இந்த இடத்தை எடுத்தே தீருவேன் என்று. நல்ல வேளை போட்டி போட்டவர்கள் நல்ல மனதோடு இடையில் விட்டுவிட்டார்கள். அவர்களுடைய மனதையும் பிள்ளையார் தான் மாற்றினார் என்று செல்வா அண்ணர் நம்புகிறார். இல்லாவிட்டால் செல்வா அண்ணருடைய மருமக்கள், பெறாமக்கள் எல்லோரும் இந்த இடம் நல்ல இடம் கீழுக்கு பார்(Bar) ம் மேலுக்கு Resturent உம் போட்டால் கார்ப் பாக் வசதியும் இருப்பதால் நல்லா உழைக்கலாம் காசு கொட்டும் ஆனால் நீங்கள் கோவில் கட்டப் போகிறேன் என்று சொல்வதால் உங்களைப் பலவந்தப்படுத்த முடியாமல் இருக்கிறது. எதற்கும் யோசியுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அவர்கள் நல்ல மனதோடு சொன்னதை செல்வாஅண்ணர் ஏற்றுக் கொண்டாலும் தான் நினைத்ததை செயல்படுத்துவதிலேயே அவர் கண்ணாக இருந்தார். அவரைப் பிள்ளையார் தூண்டிக்கொண்டு இருக்கும் போது எப்படி அவர் மாறுவார். அதுமட்டுமல்ல அவருடைய மகளுக்கு கணவனாக முரளீதரன் வந்தார். அவர் மிகவும் தெய்வபக்தி கொண்டவர் அவருடைய குடும்பமும் கோயில் கட்டுவதில் ஈடுபாடு கொண்டவர்கள். செல்வா அண்ணன் சொல்லுவார் அவரைப் பிள்ளையார் தான் தந்தது, இல்லாவிட்டால் தன்னால் இந்த ஆலயத்தை உருவாக்க முடிந்திருக்குமா என்பது கேள்விக்குறியே. திரு. முரளீதரனும் இந்த ஆலயம்

உருவாவதற்கு மிகவும் உழைத்தவர். இவருடன் செல்வா அண்ணரின் மனைவி பிள்ளைகளின் கைவண்ணமும் இந்த ஆலயத்தில் ஒவ்வொரு அங்குலத்திலும் பதிந்திருக்கிறது.



திரு திருமதி சேனாதிராஜா

அதே போல் செல்வா அண்ணரின் ஒரே சகோதரியான திருமதி கருணா சேனாதிராஜா இவர் தம்பியாருக்கு மிக உதவியாக இருப்பவர். இவரின் குடும்பமும் கோயில்களோடு மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள். அவருடைய கணவன் திரு. க. சேனாதிராஜா (P.W.D. Overseer) அவர்களும் நமது செல்வா அண்ணாவும், டாக்டர் ராஜசுந்தரமும் (வெலிக்கடை சிறைச்சாலையில் உயிர் நீத்தவர்.) மாவிட்டபுரம் திரு. ராஜரட்ணம்(சிவா தியேட்டர் உரிமையாளர்) இவர்கள் நால்வரும் முன்னின்று சப்ரகமுவ மாகாணத்தில் அவிசாவளைக்கும் இரத்தினபுரிக்குமிடையில் எகலியகொட என்கின்ற சிங்கள கிராமத்தில் அங்கு வாழும் தமிழ் மக்களின் ஆன்மீக உணர்வை வளர்க்க வேண்டும் என்கின்ற நல்ல உள்ளத்தோடு ஒரு முருகன் கோயிலை 1968ம் ஆண்டு கட்டினார்கள். அங்கே மூல விக்கிரகமாக வைக்கப்பட்ட வேல் கீரிமலை சிவன் கோயிலிலிருந்து ஏறத்தாழ 240 மைல்கள் ஊர்வலமாகக் கொண்டு சென்று ஸ்தாபிக்கப்பட்டது. செல்வா அண்ணரின் மைத்துனர் திரு. க. சேனாதிராஜா அவர்கள் ஓவசியராக இருந்ததால் அங்கு பணப்பஞ்சம் இருக்கவில்லை. வேண்டிய அளவு பணத்தை இறைத்துக் கொண்டே இருந்தார்.

திரு. செல்வா அண்ணரும் டாக்டர் ராஜசுந்தரத்தினதும் நேரடி மேற்பார்வையில் ஆலயம் மிகத் துரிதமாகக் கட்டப்பட்டது. அப்போது செல்வா அண்ணர் சிறு வயதுப் பையனாக இருந்தாலும் ஆலயம் உருவாக்குவதில் அப்போதே அவருக்கிருந்த ஈடுபாடு பிரமிக்கத்தக்கது. அந்த அனுபவம் தான் இன்று நமது செல்வவிநாயகர் ஆலயம் இவ்வாறு சிறப்பாக அமையக் காரணமாக இருந்தது எனலாம். அந்த முருகன் ஆலயம் இப்போது 2005ம் ஆண்டு பாலஸ்தானம் செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டு கும்பாபிஷேகத்திற்குத் தயாராக இருப்பதை இங்கேயுள்ள படத்தில் காணலாம்.



பெற்றோரைப் போலவே திரு. திருமதி சேனாதிராஜா அவர்களின் பிள்ளைகள் எல்லோருமே மிகுந்த ஒத்தாசை புரிந்தவர்கள். குறிப்பாக மூத்தவரான திரு. சர்வேஸ்வரன் மாமன் என்ன உதவி கேட்டாலும் மறுக்காமல் செய்வார். திருமதி. ரேகா விக்னேஸ்வரன் அவர்கள் ஆலய பூர்வாங்க வேலைகளில் மாமனுக்கு வலது கரமாகச் செயற்பட்டவர். இவர்கள் செய்த உதவிகளை ஒவ்வொன்றாகச் சொல்வது கஷ்ரம். தொடர்ந்து மாமனுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக இருந்தவர்கள். அதேபோல் மற்றப் பிள்ளைகளும் ஆரம்ப வேலைகளில் அப்பப்போ பிரயோசனமான ஆலோசனைகளைத் தந்துதவியிருந்தார்கள்.



செல்வா அண்ணரும் இந்தியாவில் அவருக்கு உதவியாக இருந்த திரு தி.தம்பிநாயகம் அவர்களும்

அடுத்து செல்வா அண்ணரின் மைத்துனி திருமதி. லீலா திருநாவுக்கரசு அவர்களின் குடும்பமும் மிகவும் ஒத்தாசையாக இருந்தார்கள். குறிப்பாக மூத்தவரான திரு. தம்பிநாதன் குடும்பமும், விக்னேஸ்வரனும், மகள் ஜீவாவின் கணவரான திரு. பிறேமும் ஆலய பூர்வாங்க வேலைகளில் செல்வா அண்ணருக்கு மிகவும் கைகொடுத்து உதவினார்கள். இவர்களில் மூத்தவரான திரு. தம்பிநாதனுக்கும் அவர் குடும்பத்திற்கும் ஆலய நிர்மாண விஷயத்தில் செல்வா அண்ணர் மிகவும் நன்றியுடையவராக இருக்கிறார். அவர் இந்தியாவில் இருப்பதால் அங்கு செய்யவேண்டிய

பல வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்தார். செல்வா அண்ணர் இரண்டு வார லீவில் இந்தியா சென்று அந்த இரண்டு வாரமும் வீட்டில் தங்கிய நேரம் மிகக்குறைவு, மகாவலிபுரம், தருச்சி, மதுரை, காஞ்சிபுரம், சுவாமிமலை, ராமேஸ்வரம் போன்ற இடங்களுக்கு திரு தம்பிநாதன் அவர்களுடைய வாகனத்தில் சுற்றித்திரிந்து வேலைகளை ஆரம்பித்து அதற்கான பூர்வாங்க வேலைகளைப் பற்றிய விளக்கங்களைக் கொடுத்து ஆரம்பித்து வைத்துவிட்டு இலண்டனுக்குத் திரும்பிவிட்டார். பொதுவாக இந்தியாவில் இரவில் வாகனத்தில் பயணம் செய்வது மிக ஆபத்தான காரியம். பாரிய வாகனங்க ளெல்லாம் இரவில் கண்மண் தெரியாமல் ஓட்டுவார்கள். அகப்பட்டால் அரைத்து சட்னி போட்டு விடுவார்கள். ஆனால் தம்பிநாதனின் வாகன ஓட்டுனர் திரு ஐயர் அவர்கள் மிகவும் அவதானமான பாதுகாப்பான சாரதி என்பதால் எந்த அனர்த்தமும் நடக்கவில்லை.

திரு தம்பிநாயகத்திடமே இந்தியாவிலிருந்து வரவேண்டிய சாமான்கள் எல்லாவற்றையும் ஒன்று

சேர்த்து அனுப்பும் பொறுப்பைக் கொடுத்துவிட்டு செல்வா அண்ணர் இலண்டன் வந்தார். அவ்வளவு பொருட்களையும் மூன்று கப்பல்களில் ஏற்றி அனுப்பும் பொறுப்பை அவர் மிகத்திறமையாக செய்து முடித்ததை என்றும் மறக்க முடியாது. மேற்படி ஆலயவரலாற்றில் அவரும் ஒரு இடம் பிடித்து விட்டார். அதேபோல் அவருடைய தம்பி திரு. விக்னேஸ்வரன் அவர்களும் ஆலய வளர்ச்சியில் தன் ஈடுபாட்டைக் காட்டியிருந்தார். ஆலயம் கட்டப்பட்ட காலத்தில் அடிக்கடி வந்து பல ஆலோசனை களை வழங்கியிருந்தார். திரு விக்கியின் சகோதரி ஜீவாவின் கணவர் திரு. பிறேம் ஒரு கட்டிட ஒப்பந்தக்காரர். ஆலய கட்டிட வேலையில் ஏற்பட்ட தொய்வுகளை ஒரு சிறு தொலைபேசி அழைப்பில் வந்து உடன-டியாக சரி செய்து கட்டிட வேலைகள் தொடர்ந்து துரிதமாக முன்னெடுத்துச் செல்லப் பல வழிகளிலும் உதவி செய்தார். அவரை செல்வா அண்ணர் மிகவும் நன்றியோடு நோக்குகிறார்.

அதேபோல் செல்வா அண்ணரின் மூத்த மருமகன் திரு. முரளீதரனின் தம்பியார் திரு. நிர்மலன் நடராஜா இவர் ஒரு இசையமைப்பாளர். T.T.N தொலைக்காட்சி சேவைக்கு பலகாலம் இசையமைப்புத் துறையில் பல உதவிகள் செய்தவர். **மூங்கில் நிலா** என்கிற C.D ஐ வெளியிட்டு புகழ்பெற்றவர். எமது ஆலய வெளியீடான செல்வநாதம் C.D ஐ பல சோதனைகளுக்கு மத்தியில் தயாரித்து ஆலயத்திற்கு அளித்தவர். அதில் வந்த ஒரு பாடலை திரு. எஸ் பி பாலசுப்ரம


திரு நிரு அவர்கள்

ணியம் பாடமாட்டேன் என்று சொல்லிவிட்டார். தான் பாடினால் தன்னை "பொடா" சட்டத்தில் பிடித்து உள்ளே போட்டுவிடுவார்கள் என்று பயந்து மறுத்துவிட்டார். உடனே இரண்டு மூன்று வரியை மாற்றி திரு. திபுவைக்கொண்டு பாடவைத்துவிட்டார். பின் எஸ். பி அவர்கள் தானும் பாடுவதாக ஒப்புக் கொண்டார். அதன்பின் எஸ்.பியும் திபுவும் பாடியுள்ளார்கள். அப்படிப் பல தடைகளைக் கடந்து நிருவின் விடாமுயற்சியால் அந்த ஆலய வெளியீட்டுச் C.D இன்று ஒவ்வொருத்தரின் வீட்டிலும் வாகனத்திலும் ஒலித்துக்கொண்டிருக்கிறது. திரு நிரு அவர்கள் இப்போது இரண்டு சினிமாப் படங்களுக்கு இசையமைத்துக்கொண்டு இருக்கிறார்.

அடுத்தபடியாக கவுன்சிலர் திரு. போல் சத்தியநேசன் அவர்கள் ஒரு கிறிஸ்தவனாக இருந்தபோதும் திரு செல்வா அண்ணரோடு பல வேலைகளில் ஒத்தாசையாக இருந்தார். அவரோடு திரு. த. ஜெயரஞ்சன் அவர்களும் பல உதவிகளைச் செய்துள்ளார்

ஆலய கட்டிட வேலைகளோடு பிளம்பிங், வயறிங், கீற்றிங் வேலையும் செய்தவர் திரு. Glen Camroon. இவருடைய வேலையும் மிகவும் பாராட்டப்பட வேண்டியது.

அடுத்து ஆசாரியார்களான திரு. ஜனா, திரு ராஜ் இவர்கள் இருவரும் செல்வா அண்ணரின் பிள்ளைகள் மாதிரி இவர்களை திரு பாலரவி (J.R Print) அவர்கள் அறிமுகப்படுத்தி யிருந்தார். அவர்களுடைய கடும் உழைப்பு எமது ஆலய அமைப்பு திறமையாக அமைவதற்கும் துரிதமாக நிறைவு பெறுவதற்கும் உதவியாக இருந்தது. இரவு பகல் பாராமல் கண் துஞ்சாமல் 24 மணி நேரமும் ஆலய வளாகத்துள்ளேயே இருந்து வேலையை முடித்தார்கள். சில விஷயங்களை வாயால் சொல்ல முடியாது. மார்கழி குளிரில் கீற்றர் வசதியும் இல்லாமல் நடுங்கி நடுங்கி வேலைகள் செய்ததை செல்வா அண்ணனால் மறக்கமுடியாது. அவர்களிடமே ஆலயத்திற்குத் தேர் செய்யும் பொறுப்பையும் செல்வா அண்ணர் கொடுத்துவிட்டார். அவர்களில் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தால் பாரிய பொறுப்பான தேர் செய்யும் பொறுப்பைக் கொடுத்திருப்பார்கள். ஆனால் அவர்களுக்கும் பல சோதனைகள் பல தடைகள் குறுக்கிட்ட போதும் எல்லாவற்றிற்கும் முகங் கொடுத்து ஓர் அழகிய சித்திரத்தேர், தேர்த்திருவிழாவுக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் கொண்டு வந்து ஆலய வளவில் இறக்கினார்கள். பகுதி பகுதியாக வந்திறங்கிய தேர்ப்பகுதிகளை இரவிரவாகப் பொருத்தி தேர்த்திருவிழாவுக்கு முதல் நாள் வெள்ளோட்டம் விடப்பட்டு, தேர்த்திருவிழாவன்று 15.08.2004 அன்று ஏறத்தாழ 23 அடி உயரத்தேர் இங்கிலாந்திலேயே மிக உயரமான ஒரு சித்திரத்தேர் வீதியுலா வந்தது. இதன் பின்னால் இதற்காக உழைத்தவர் பலர். அவர்கள் எல்லோருக்கும் செல்வா அண்ணரின் நன்றி உரித்தாகும்.



தாயகத்தில் இருந்து தருவிக்கப்பட்ட தேர்ப்பாகங்கள் ஆலய வளாகத்தில் இறக்கப்படுவதை தலைவரும் ஆசாரியார் திரு ஜனாவும் பார்வையிடுகின்றனர்.

அடுத்து ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தை தலைமை தாங்கி நடாத்தித் தந்த செல்வா அண்ணரின் உரவரும் பாடசாலை சகாவுமான சிவாச்சாரியார் திரு. இராமலிங்கம் விஸ்வேஸ்வர சர்மா

அவர்களையும் பல்கலை வேந்தன் திரு. ஸ்ரீதரக்குருக்கள் அவர்களையும் நன்றியுடன் நினைவு கூறுகிறார். கும்பாபிஷேகத்திற்கு முதலே வந்து பல ஆலோசனைகளை எமக்கு அளித்து மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடக்க பல வழிகளிலும் உழைத்த அவர்களின் சேவை மனப்பான்மையை பாராட்டியே தீரவேண்டும். மகாகும்பாபிஷேக சிறப்பிற்கு திலகமிட்ட இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலய பிரதம குருவான கயிலை ஸ்ரீ நாகநாதசிவக்குருக்களும் ஆலய அறக்காவலர்களும் நன்றிக்குரியவர்களே.

மகா கும்பாபிஷேகத்தன்றும் முதலும் பல அறக்காவலர்களோடு சைவமுன்னேற்றச் சங்க பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தமை மிகவும் வரவேற்புக்குரியதாகும். அதில் ஈலிங் அம்மன் ஆலய நிர்வாக சபைத்தலைவர் திரு. சொ. கருணைலிங்கம் திரு பிரேமச்சந்திரன் தேவசகாயம் உயர்வாசற் குன்று ஆலய அறக்காவலர் திரு செல்லத்துரை, திரு. வை. வைரமுத்து பாரீஸ் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய ஸ்தாபகரும் அறக்காவலருமான திரு. வை. சந்திரசேகரம் சைவ முன்னேற்றச் சங்க பிரமுகர்கள் திரு. V.R. Ramanathan திரு. W. நாகரட்ணம், திரு.கு சிதம்பரப்பிள்ளை ஆகியோரும் விளம்பர வேலைகளில் பல ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் தந்த திரு பாலரவி ஆகியோரக்கும் நன்றி செலுத்தியே ஆகவேண்டும்.

ஆலயத்திற்கு இடம் எடுத்ததிலிருந்து மகாகும்பாபிஷேகம் வரை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம் கடந்து வந்த பாதை வரலாறாக இங்கே பதியப்பட்டள்ளது. இன்னும் சிலரது சில விஷயங்களும் தவறுதலாக விடப்பட்டிருக்கலாம். அதைப் பெரிது படுத்தாது பெரியவர்கள் மன்னித்தருள வேண்டுகிறோம்.

கும்பாபிஷேகத்திற்கு பின்பு நடந்த சோதனைகளும் வேதனைகளும் ஆலய முன்னேற்றத்திற்காக உழைத்தவர்கள், உழைப்பவர்களைக் கொண்டு பின்னப்பட்ட வரலாறு அடுத்த ஆண்டு மலரில் வெளியிடுவோம். அதுவரை உங்களிடமிருந்து விடைபெறுகிறோம்.



மகாபலிபுரத்தில் தலைவர் அவர்கள் ஆசாரியாரோடு அளவுப்பிரமாணங்கள் பற்றி அளவளாவுகிறார்.




சென்னை காளிகாம்பாள் சிவாச்சாரியர் வீட்டில் தலைவர் ஆலய அமைப்பை விபரிக்கிறார்.

# இரண்டாவது ஆண்டு நிறைவு மலர் -2006

1.ஆலய மஹோற்சவ உபயதாரர்களின் விபரம்
2. விசேட தின உபயதாரர்களின் விபரம்
3. அன்னதான உபயதாரர்களின் விபரம்
4. அபிசேக உபயதாரர்களின் விபரம்
5. நன்கொடையாளர்கள், விளம்பர உதவியாளர்கள், ஆலய தொண்டர்களின் ஈடுபாடுகள் பற்றிய விபரம்
6. சைவ முன்னேற்றச்சங்கத்திற்கும் ஆலயத்திற்கும் இடையில் உள்ள ஈடுபாடுகள்
7. மற்றைய ஆலயத்திற்கும் எமது ஆலயத்திற்கும் உள்ள ஈடுபாடுகள்
8. ஆலயத்தின் கலாச்சார நிகழ்வுகளும் தாயகம் நோக்கிய பார்வையும், இன்னும்பல வரலாற்றுப் பதிவுகள்...... அடுத்த ஆண்டு மலரில்...

நன்றி
விழா மலர்க்குழு



ஆலய வரைபடத்திற்கு
காஞ்சி சிறியவரின்
ஆசி பெறப்படுகின்றது.



பஞ்சலோகத்தில் செய்யப்படும விநாயகர்
சுருவம் உருவாகும் காட்சி.
பங்குபற்றியவர்கள் சாமிமலை
ஆசாரியார்களுடன் தலைவரும் அவர்
பெறாமகன் திரு தி.தம்பிநாதன் அவர்களும்.



தலைவர் அவர்களை
காஞ்சிபீடத்து யானை
ஆசீர்வதிக்கின்றது.



காஞ்சிபுரத்தில் உள்ள குருகுலத்தில்
தலைவர் திருமதி உமாபதி
சிவாச்சாரியாரோடு அளவளாவுகிறார்.



அறங்காவலர் திரு செல்வா, நியூகாம் கவுன்சிலர் Alex J.P.Hilton அவர்கள் செய்த உதவியைப் பாராட்டிப் பேசுகின்றார்.



ஆலய பக்தப்பெருமக்களின் ஒரு பகுதியினர்



சைவ முன்னேற்றச்சங்கத்தலைவர் திரு கு.சிதம்பரப்பிள்ளை அவர்கள் பலரையும் பாராட்டுகின்றார்



Aldborough Cllr திருமதி வனேசா கோல் அவர்களைப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பவர் நிர்வாக சபைச்செயலாளரும் Party Paradise உரிமையாளருமான திருமதி ரேகா விக்கி. பின்புறமாக நிற்பவர் Seven Kings கவுன்சிலர் திரு Bob Little அவர்கள்




கும்பாபிசேகத்திற்கு வந்திருந்த கவுன்சிலர் திரு தேவ் சர்மா அவர்களை ஆலய தலைவர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார்.



எமது அறங்காவலரின் மனைவி திருமதி செல்வராஜா அவர்கள் கவுன்சிலர் எலைன் நோர்மன் அவர்களை பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார்.



சிவாச்சாரியார்கள் புடைசூழ தலைவர் அவர்கள் பலரையும் பாராட்டிப் பேசுகின்றார்.



அறங்காவலர் திரு W.நாகரத்தினம் அவர்களோடு கவுன்சிலர் திருமதி Kathleen Mpepperell



சைவ முன்னேற்றச்சங்கப் பிரமுகர் திரு வ.இ. இராமநாதன் அவர்களை ஆலய தலைவர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார்.அருகில் பொருளாளர் திரு முரளிதரன்



இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலய பிரதம குருக்கள் கயிலை ஸ்ரீநாகநாதசிவம் சிவாச்சாரியார் தலைவரை பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார்.




நியூபறிபார்க் கவுன்சிலர் திரு அலெக்ஸ் அவர்கள் செய்த உதவியைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுகின்றார்.



கும்பாபிசேகத்திற்கு வருகை தந்த பக்தப்பெருமக்களுக்கு கும்பாபிசேகம் பற்றி கயிலை நாகநாத சிவம் சிவாச்சாரியார் உரையாற்றுகின்றார்.



ஹரோ கவுன்சிலர் திரு தயா இடைக்காடர் அவர்களை அறங்காவலர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார். ஆலய பிரதம குருக்கள் காளாஞ்சி வழங்கிக் கௌரவிக்கின்றார்கள். அருகில் சட்டத்தரணி திரு கு.சிதம்பரப்பிள்ளை உரை பார்க்கின்றார்.



நியூஹாம் கவுன்சிலர் திரு போல் சத்தியநேசன் அவர்களை அறங்காவலர் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார்.



இலண்டன் ஸ்ரீமுருகன் ஆலய அறங்காவலர் திரு சம்பத்குமார் அவர்களை ஆலய தலைவர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார்



சிவாச்சாரியப்பெருமக்களோடு அறங்காவலருக்கு அருகில் நிற்பவர் கவுன்சிலர் Kathleen M.Pepperell



ஆலய சித்திரத்தேர் இருப்பை விட்டு நகர்கின்றது.



கும்பாபிசேகத்திதைத் தரிசிக்க வந்திருக்கும் பக்தப்பெருமக்களின் ஒரு பகுதியினருடன் வலது பக்கத்தில் நிற்பவர் எமது அறங்காவலரின் தலைவனாரும் பாரிஸ் ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஸ்தாபகர், அறங்காவலர் ஸ்ரீமான் வை. சந்திரசேகரம் அவர்கள்



ஐரோப்பாக் கண்டத்திலேயே மிக உயர்ந்த தேர் என்று சொல்லக்கூடிய மிக உயர்ந்த சித்திரத்தேர் இலண்டன் வீதியிலே பவனி வரும் காட்சி



கும்பாபிசேகத்தைத் தரிசிக்க வருகை தந்த பக்தப்பெருமக்களின் ஒரு பகுதியினர்




கும்பாபிசேகத்திற்கு வருகை தந்த சிவாச்சாரியார் அவர்களை பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார் அறங்காவலரின் மகன் ஸ்ரீகுமரன்



கும்பாபிசேக பிரதம குரு ஸ்ரீலஸ்ரீ விஸ்வேஸ்வர சர்மா அவர்கள் பக்தப்பெருமக்களுக்கு உரையாற்றுகிறார்



கும்பாபிசேக பிரதம குரு திரு விஸ்வேஸ்வர சிவாச்சாரியார் அவர்கள் எம்பெருமான் விநாயகனுக்கு கும்ப அபிசேகம் செய்கிறார்.



வைரவர் மடையில் தனித்தனியாக அடுப்பு வைத்து தாயகத்தில் பொங்குவது போல் இங்கும் வைரவர் பொங்கல் வெகுசிறப்பாக நடைபெறுகிறது.

# முதலெழுத்து

(மு. சிவராசா)

"மோனமே குறியதா முதலெழுத் தருளிய
ஞானமா மதலைபால் நண்ணவே பூதவெஞ்
சேனையா யினஅருள் செய்துசிற் பரையொடும்
ஆனைமா முகனொடும் அமவன்மீண் டருளினான்".

விநாயகக் கடவுள் பிரணவமூர்த்தி எனப்படுவர். வேதம் ஓதத் தொடங்கும் போதும் ஓதிமுடியும் போதும் ஓம் என்பது சொல்லப்படும். ஏல்லா வழிபாடுகளிலும் விநாயக வணக்கம் முதலிடம் பெறுவதற்கு இதுவே காரணமாகலாம். ஓங்காரத்தைக் குறிக்கும் வரிவடிவு உ என்பதாகும். இதில் இரண்டு உறுப்புக்கள் உள்ளன. முதலாவது 0 ஆகிய நட்சத்திர வடிவு. இது விந்து எனப்படும். மற்றையது --- ஆகிய தண்ட வடிவம். இதை நாதம் என்பர். இவை இரண்டும் சேர்ந்த வடிவத்தையே நாம் பிள்ளையார் சுழி என்கிறோம். இதனை ஊமை எழுத்தென்றும் மௌனாக்கரம் என்றும் கூடச் சொல்லுவர். இந்த உ என்னும் எழுத்து விநாயகப் பெருமானின் துதிக்கையை நினைவுபடுத்துவதாம்.

விநாயகப் பெருமான் சிவனின் வேறல்லர். அதேபோல் முருகப்பெருமானும் சிவனின் வேறல்லர். இவ்வுண்மையைச் சிவனின் வாக்காக,

"ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்போல் பிரிவிவன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்"

என்று கந்தபுராணம் கூறும். அதே போல விநாயகர் உமாதேவியாரின் வேறானவரும் அல்லர். ஆக சிவன், உமை, விநாயகர், முருகன் யாவரும் அபேதமாய் விளங்குவதை சைவநூல்கள் விளக்கி உரைக்கும். விநாயகரின் தந்தையாக சிவபெருமானையும் தாயாக உமாதேவியாரையும் கொள்ளுகிறோம். ஓம் என்னும் பிரணவம் அ + உம் எனப் பிரியும். அதுவே உ + ம் +அ என மாறி வரும் போது உம் என்றாகி சக்தியைக் குறிக்கும்.
பெண் யானையின் வடிவை உமாதேவியார் கொள்ள, ஆண்யானையின் வடிவை சிவபிரான் கொண்டு அடியவர்களின் துன்பம் தீர்க்கும் கணபதியைத் தோற்றுவித்ததாக "பிடியதன் உரு உமைகொள" என்ற தேவாரத்தின் வழி திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்தார்.

விநாயகப் பெருமான் தோன்றிய வரலாற்றைக் கந்தபுராணம் பின்வருமாறு கூறுகிறது. சிவபிரான் உமையம்மையாரை அழைத்துக்கொண்டு சோலை ஒன்றிற்குச் செல்கிறார். ஆங்கு ஓர் ஓவிய சாலை, உள்ளே போனதும் -ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள- என்ற வாறு அம்பிகையின் ஐம்புல அறிவும் ஒன்றித்துக் கண்வழி செல்ல ஓவியச் சாலையிலுள்ள ஓவியங்களை ஒவ்வொன்றாக நோக்குகிறார். அவ்வமயம் ஓர் ஓவியத்தில் அவர் பார்வை ஊன்றுகிறது. அது ஓம் என்னும் பிரணவ எழுத்து, அந்தக் கணத்தில் பரமசிவன் திருவுள்ளப்படி அந்த ஓரெழுத்தே ஆண்யானை பெண்யானை என இரு வடிவங்களாய், துதிக்கை கொண்ட இரண்டு மலைகள் போலத் தோன்றின. அவைகளை உமை உற்றுப் பார்க்க அவை முயங்க முயலுகின்றன. அப்போது அவர் அதன் காரணம் யாது என இறைவனை வினவுகிறார். இறைவன் பதில்- உலகில் தோன்றும் பொருட்கள் எல்லாவற்றிற்கும் வித்தாகவுள்ளது, அநாதியாய் ஒப்பில்லாத பெருமை உடையதுமான பிரணவம் உன் திருவருட் கண் பார்வையால் இவ்வாறான யானைகளின் வடிவு கொண்டு முயங்குகின்றன. ஆதலால் அது உனது பார்வை விசேடமே.

இவ்வுண்மையை நீயே அறியாய். உன் பார்வை மாத்திரத்தே நடந்தது இந்நிகழ்வு. உன் பெருமை அளப்பரியது. உன் திருவருட் செய்கையின் பெருமையை வேதங்கள் தானும் அறியமாட்டா. ஆதனை யாம் மாத்திரமே அறிவோம். இவ்வாறு பரமன் தேவிக்குக் கூறியருள, களிறும் பிடியுமாய்த் தோன்றிய பிரணவம் முன்போலவே ஓரெழுத்தாகி ஒடுங்கியது.

அந்நேரத்தில் அவ்விடத்தே அருள் சுரக்கும் திருவிழிகள் மூன்றும், தொங்குகின்ற வாயும், களிற்று யானை முகமும், ஐந்து திருக்கரங்களும், பிறைச் சந்திரனைத் தரித்த சிவந்த சடையும், கொண்டு இச்சை, கிரியை, ஞானம் என்னும் மும்மதங்கள் பெருக விநாயகக் கடவுள் தோன்றினார்.

சைவசமயத்தில் பரம்பொருளாகக் கொள்ளப்படும் கடவுள் தமது சொரூப நிலையில் சிவம் எனப்படுவர். அடியவர்களுக்கு அருள் புரிதற்பொருட்டு தடத்த நிலையில் எடுக்கும் உமை, விநாயகர், முருகன் போன்ற மூர்த்தங்கள் அவரின் வேறல்ல. இதனால் பலவேறு பெயர்களால் துதிக்கப்படும் தெய்வம் ஒரே சிவம் என்பதை உளம் கொள்ளல் வேண்டும்.

"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற் புதமலர் தலைக்கணி வோமே".

# MSR

## ACCOUNTING & TAX CONSULTANCY LTD

### Providing a Wide Range of Professional services in :

- Accountancy
- Business Start up Advice
- Business Plans & Cash Flow Forecasts
- Personal Tax Affairs & Self Assessment
- Company Tax Affairs & Company Tax Return (CT 600)
- Preparing VAT, Payroll for the Sole Tradersm Partnership & Limited Companies
- Company Formation
- Attending VAT & PAYE visits
- CIS Voucher & Construction Industry Services
- Tax Investigation

Finance Arranged For business Loan & Mortgages

Contact :

M.Ruban FCMA

M.Shah FCA

335 Ley Street

Ilford

Essex

IGI 4AA

Tel : 0208 518 5576

Mob : 07952 702 962

E-mail: sathiyarubas@btinternet.com

# வளமான வாழ்விற்கு வழிகாட்டும் விநாயகர் வழிபாடு



விநாயகர் பிரணவ வடிவினர் பிரணவம் வட்டவடிவைக் குறிக்கும். இயற்கை அசைவுகளெல்லாம் வட்டமானவையே. வட்டத்திற்கு முடிவு இல்லை. வேறெந்த வடிவுக்கும் முடிவு உண்டு. இவர் பிரணவ வடிவ-னராக இருப்பது சகலமும் தோன்றுவதற்கு முதற் காரணர் என்பதை விளக்கும். "கணபதி" என்ற பெயர் மூலப்பொருட்களுக்குத் தலைசவன் என்ற பொருளை உணர்த்துவதாகும். இப்பெயரும் முதற்காரணர் என்பதை விளக்குகின்றது.

பிரணவத்தின் வடிவமாக விநாயகப்பெருமான் திகழ்கிறார். வேதத்தில் முதல் எழுத்து விநாயகரது சுத்தஞான வடிவம் என்பதை விநாயகரது திருவுருவமே உணர்த்துகிறது. இத்திருவுருவத் தோற்றமே "கைவேழமுகம்" என்று அழைக்கப்படுகிறது. மேலும் "முந்தை வேத முதலெழுத்தாகிய எந்தை" எனவும், "மூலமொழிப் பொருளா மெந்தை" எனவும், தாரகப் பிரமமான மாக்கய முகத்துவள்ளல்" எனவும் கந்தபுராணம் கூறுவதும் விநாயகரது இவ் அற்புதத் திருவடிவையே ஆகும்.

பிரணவத்தின் வரி வடிவம் முதற் பகுதி நட்சத்திர வடிவம் என்றும் இரண்டாம் பகுதி தண்டவடிவமாக அமைந்திருப்பதாகவும், காமிக ஆகமம் கூறுகிறது. எனவே இவ்விரண்டு உறுப்புகளும் கலந்த வடிவம் (0 உ) ஓமை எழுத்து என்றும் மூல மனு என்றும் பிள்ளையார் சுழி என்றும் மௌனாக்கரம் என்றும் கூறப்படுகிறது.

விநாயகர் பிரணவ வடிவினர் என்பதைக் காட்டுவதற்காகவே மோதகம், தேங்காய், மாதுளம்பழம் முதலிய வட்டப்பொருட்கள் அவருக்கு நிவேதிக்கப்படுகின்றன. மேலும் விநாயகர் சத்துவகுணத்தினராக வளங்குவதால் பால், தேன், சர்க்கரை, பருப்பு, அவல் முதலிய பதார்த்தங்கள் அவருக்கு நிவேதிக்கப்படுகின்றன.

கயமுகாசூரன் என்பவனாற் செய்யப்பட்ட கொடுமைகளை அடக்கித் தேவர்களை மீட்டு அவ்வசுரனை ஆட்கொள்வதற்காக இறைவன் கொண்ட திருக்கோலமே விநாயகராகும்.

விநாயகர் யானைமுகம், பருத்ததொந்தி, மூன்று திருக்கண், இரண்டு திருவடிகள், இருந்த பாவனை, கஜமுகாசூரனைக் கொல்ல முறித்த கொம்பு மற்றும் அங்குசத்தைத் தாங்கிய வலது கைகள் இரண்டு, பாசமும் மோதகமும் தாங்கிய இடதுகைகள் இரண்டு துதிக்கை ஆகிய ஐந்து திருக்கைகள் கொண்ட திருக்கோலத்தில் பெருச்சாளி வாகனத்தில் எழுந்தருளியிருப்பார்.

இயற்கையான யானைக்குத் தொந்தி வயிறு இருப்பதில்லை ஆயினும் சகல அண்டங்களும் சராசரங்களும் ஓங்காரம் என்னும் பிரணவத்துள் அடங்குவதால் அவ்வடிவினரான யானைமுகப் பிள்ளையாருக்கு தொந்தி வயிறு அமைந்திருப்பது இயல்பாகின்றது. விநாயகரின் திருக்கண்கள் மூன்றும் இச்சை, கிரியை ஞானம் ஆகிய மூன்றையும் குறிப்பனவாகும். பரஞானத்தால் எதனையும் காணவேண்டும் என்பதைக் குறிப்பது நெற்றிக்கண். அவரின் விரிந்த காதுகள் அன்பர்கள் கூறுவதைக் கேட்கும் ஆவல் உடையவர் என்பதைச் சுட்டுகின்றது. கஜமுக சங்காரத்தின் போது முறிக்கப்பட்டதாகிய ஒற்றைக் கொம்பை ஏந்தி நிற்பது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் நீக்குபவர் விநாயகர் என்பதைக் குறிக்கின்றது.

ஆன்மாக்களை அனாதியே பற்றிக்கொண்ட ஆணவ மலமாகிய யானையைப் பாசமென்னும் கயிற்றால் கட்டி அங்குசத்தால் அடக்கி மறைத்தல் என்னும் தொழிலைச் செய்பவர் தாம் என்பதை உணர்த்துவதற்காகவே விநாயகர் பாசாங்குசங்களை ஏந்தியுள்ளார்.ஆணவ வடிவமான கஜமுகனுடைய சேனைகளைப் பாசத்தால் கட்டி கோடரியால் அடக்கி அவனது மலவலி நீக்கி, பெருச்சாளி உருவமாக அவனை மாற்றி அவனுக்கு நீங்காத ஞானத்தைக் கொடுத்துச் சுத்தனாக்கித் தனது வாகனமாகும் பேற்றினைக் கொடுத்து அடிமைகொண்டதனால், ஆணவம் என்ற மதங்கொண்ட யானையை அடக்கி ஆன்மாவை ஈடேற்றுபவராக விநாயகர் விளங்குகிறார் என்பது தெளிவாகிறது.

விநாயகரைப் பூசித்து பெறுதற்கரிய பேறுகளும், தெய்வப் புலமையும், பெற்ற ஔவையார் பாடிய விநாயகர் அகவலில் வரும் "கோடா யுதத்தால் கொடுவினை களைந்து" என்ற அடியும், "கண்ணிலான வெங்கரி பிடித்தடக்கிக் கரிகினேற் குருகையுமாக்கும்" என்ற தணிகைப் புராணத் திருவாக்கும் விநாயகர் கஜமுகனின் ஆணவ மலத்தை ஒடுக்கியருள்புரிந்தமை பற்றி அழகுற எடுத்தியம்புகின்றன.

பிள்ளையாருக்குரிய நிவேதனப் பொருட்களாகிய அவல், பொரி, பெரியகடலை போன்றவை வறுபட்டு முளை இழந்த விதைகளைக் குறிப்பன. இவற்றை விநாயகருக்கு நிவேதிப்பது விநாயகரை அண்டித்தம்மை அர்ப்பணிப்போருடைய வினைப்பயன்கள் வறுபட்டு பிறவித்துன்ப முளை இழந்து பேரின்பம் கிடைக்கும் என்பதை எடுத்துக் காட்டவேயாகும்

மேலும் அண்டங்கள் கோழி முட்டை வடிவையுடையன. முட்டைக்கு அண்டம் என்பது என்னொரு பெயராகும். விந-ாயகப்பெருமானுக்குரிய நிவேதனப் பொருட்களில் ஒன்றாக விளங்கும் மாதுளம்பழப் பருப்பு ஒவ்வொன்றும் சிறு முட்டை வடிவான தனித்தனி அண்டமாகவும் நூற்றுக்கணக்கான அப்பருப்புக்களை அண்டங்களாகக் கொண்ட மாதுளங்கனி ஒவ்வொன்றும் அகிலாண்டமாகவும் உருவகப்படுத்தப்படுகின்றன.

பக்தி நெறி. ஞானநெறி இரண்டிலும் மிக இன்றியமையாதது பணிவு ஆகும்."நான்" என்ற அகங்காரம் முற்றாக அகன்ற நிலை இதுவாகும். மற்றெல்லா மூர்த்திகளுக்கும் நிலத்தில் விழுந்த இலைகளும், பூக்களும் உதவாதனவாகும். ஆனால் விநாயகர் விரும்புவதோ யாவரும் மிதித்து நடமாடும் புல்லாகிய அறுகாகும். தன்னை அண்டி வழிபடுவோருக்கு எளிதில் வந்து இன்பம் தரும் பேற்றை அளிப்பவர் விநாயகர்.என்பதை இது தெளிவுபடுத்துகிறது.

விநாயகருக்கு அர்ச்சனை செய்யும் அறுகு ஒரே காம்பில் மூன்று கவருடையதாக இருத்தல் வேண்டும். இம்மூன்று கவரும் ஊசிமுனையாகவும் இருக்கும் அல்லது ஒன்றுசேர்ந்திருக்கும். எடுத்த காரியங்களை விக்கினமின்றி வெற்றிகரமாக நிறைவேற்ற விரும்புபவர்கள் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றையும் கூர்மைப்படுத்த வேண்டும் என்பதையும், இம்மூன்றையும் ஒருமுகப்படுத்தி அடக்கமாக ஒரே சிந்தனையில் வைத்திருக்க வேண்டும் என்பதையும் இக்கவருள்ள அறுகம்புல் குறிக்கிறது. விநாயகரை வழிபடும் போது மூன்று முறை குட்டி, கீழே குந்தியெழுவது, மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றையும் குட்டி அடக்கியாள்வதைக் குறிக்கும். குலைந்துபோன முப்புரி நூல் ஊசிக்காதுக்குள் புகுந்தது போல் சிதறுண்ட மனமானது காரியசித்தி பெறுவதில் இடையூறுகளை ஏற்படுத்தி தோல்விக்கு வழிவகுத்துவிடும்.

A b r a Wholesale Ltd

**UNIT 9P – H KYNOCH ROAD,**
**ELEY ESTATE,**
**EDMONTON,**
**LONDON, N18 3BD.**
**Tel: 020 8887 9303 FAX: 020 8887 9304**
**E-mail: sales@abrawholesales.co.uk**
**Web: abrawholesales.co.uk**

## POUND/ DISCOUNT TRADE SPECIALIST

**TOILETRIES, HOUSEHOLDS, TOOLS, STATIONERY, TOYS, SOFTDRINKS & CONFECTIONERY**


*"We Lead Others Follow"*

**Abra Wholesale Ltd is at the forefront of the Discount Trade. We specialise in supplying Convenient Stores, Pound/ Discount Stores, Gift Shops, Market Traders, Caterers, E-Traders, Exporters and Bulk Buyers.**

**Our approach has lead us becoming one of the most successful independent Cash & Carry companies in London. We have over 30, 000 Sq. Ft. selling space and stock over 10, 000 products in the following departments.**

| | | | |
|---|---|---|---|
| TOILETRIES | SOFT DRINKS | PAINTINGS | ELECTRICAL ITEMS |
| HOUSEHOLD | CONFECTIONERY | D.I.Y | GIFT ITEMS |
| TOOLS | CANDLES | CLOCKS | PHONES |
| STATIONERY | KITCHENWARE | PLANTS | PICTURE |
| TOYS | CERAMICS | FLOWERS | GLASSWARE |
| OCCASIONAL FURNITURE | CATERING PRODUCTS | GARDENING PRODUCTS | COMPUTER ACCESSORIES |

## WHERE TO FIND US




**OPEN 7 DAY'S A WEEK**
**MON – FRI**
**8AM – 8PM**
**SAT & SUN**
**9AM – 3.30PM**
**TEL: 020 8887 9303**
**FAX: 020 8887 9304**

OPENING A NEW STORE?
REVAMPING YOUR OLD STORE?
WANT TO TRY SOMETHING NEW IN YOUR SHOP?
WHY NOT SPEAK TO US!

**We have over 30 years experience in the retail business. We can introduce you to shop fitters and everything you will need to start your business.**
**New customers more than welcome. Why not come and see us?**

# தானத்தில் சிறந்தது அன்னதானம்

அன்னதானம் என்பது தியாகத்தின் அடிப்படையில் அமைந்தது. எந்த ஒரு கர்மாவும் அன்னதானம் இல்லாமல் நிறைவு அடைவதில்லை.

"அன்னதா" என்று புவனேஸ்வரி அன்னைக்கு ஒரு நாமம் உண்டு. நம்மை வாழவைப்பது உணவாகிய அன்னம். அன்னமளிப்பவரின் மனப்பான்மையும் அளிக்கப்படும் அன்னத்துடன் அதனைப் பெறுபவரைச் சாரும். அன்னத்தை வழங்குவதால் தேவி அன்னபூர்ணாவாகிறாள். ஒரு கையில் உணவு நிரம்பிய பாத்திரமும், மற்றைய கையில் அதனை வாரி வழங்கும் கரண்டியும் கொண்டு அவள் அளிக்கும் உணவு ஊட்டமளிப்பதுடன், ஞானமும் வைராக்கியமும் தரவல்லது.

அன்னதானம் படைத்தாலேயே ஜெபம், யாகம் செய்த பலன் கிட்டுகிறது. அன்னம் மந்திர லோபம் போன்ற யாகத்தால் ஏற்பட்ட குறையைப் போக்குகிறது. மறைந்த முன்னோர்களின் ஆசியைப் பெறச் செய்கிறது.

வாழையடி வாழையென வம்சத்தை வாழவைக்கிறது. பித்ருக்களின் தோ'த்தைப் போக்குகிறது. பித்ருக்களின்(மறைந்த முன்னோர்களின் திதி ரிவசம் போன்ற வழிபாட்டை இப்போதுள்ள காலச் சூழ்நிலையில் யாரும் செய்ய முடியாமல் போகிறது. இதன் தத்துவம் அறிந்து செய்யமுடியாமல் ஆகிறதே என வருத்தப்பட்டு வருந்தவும் நேரிடுகிறது.) வெளிநாட்டிலிருப்பவர்கள் அநேகம் பேர் இம்மாதிரி வருத்தப்படுகிறார்கள். இவ்வழிபாட்டுத் தத்துவ மகிமையை உணராமல் பின் காலம் கடந்து அதனை உணர்ந்து இவ்வழிபாட்டை மீண்டும் தொடர்ந்து செய்து அதன் பலனையடைய விரும்புகிறார்கள்.

அப்பேர்ப்பட்ட மெய்யன்பர்களுக்குச் சரியான மார்க்கமாக அன்னதானம் என்கிற சிறந்த தெய்வீக வழிபாட்டுக் கட்டளையை இலண்டன் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் வகைப்படுத்தியுள்ளார்கள். மெய்யன்பர்களுக்கும் பக்தர்களுக்கும் சேர்த்துத்தான் இந்த அன்னதானம் நடந்து வருகிறது.

ஒருவருக்கு பொன்னாகவோ, பணமாகவோ எவ்வளவுதான் அள்ளி அள்ளிக் கொடுத்தாலும் தானம் பெறுபவருக்கு திருப்தியே ஏற்படாது. "இன்னும் அதிகமாகக் கொடுக்க மாட்டார்களா?" என்று தான் ஏங்குவார்கள். ஆனால் அதையே உண்ண உணவாகக் கொடுத்தால் வயிறு நிரம்பியவுடன் போதும் போதும் என்று கூறுவார்கள். ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் சாப்பிட விரும்பினாலும் வயிறு ஏற்றுக்கொள்ளாது. போதும் என்று வயிறும் மனதும் திருப்தி அடைந்துவிடும். அதனால் தான் தானத்திலே சிறந்ததாக அன்னதானம் விளங்கி வருகின்றது.

முன்பெல்லாம் நம்நாட்டுக் கிராமங்களில் தாங்கள் சாப்பிட உட்காருமுன் யாராவது பசியுடன் வெளியில் தென்படுகிறார்களா என்று பார்த்து அவர்களை அழைத்து அமுது படைத்து அனுப்பி விட்டுத்தான் தாங்கள் உண்ணுவார்கள். சிறுத்தொண்டநாயனார், திருநீலகண்டநாயனார், முதலியவர்கள் (திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் ஆகிய சமயக்குரவர் நால்வர் உட்பட 63 நாயன்மார்கள்) சரித்திரத்திலிருந்து நாம் இதைத் தெரிந்துகொள்ளலாம்.

தானம் கொடுப்பதில் கையாளவேண்டிய சில வழிமுறைகள் உபநிடதத்திலே விதிக்கப்பட்டிருக்கின்றன. நாம் தானம் செய்யும் பொழுது மிகவும் சிரத்தையுடன்செய்யவேண்டும். (சிரத்தை இல்லையேல் தானமே செய்யாதே என்று உபநிடதம் வலியுறுத்துகிறது.) மேலும் கொடுக்க நினைத்தால் நிறையவே கொடுக்க வேண்டுமாம். அதை அனுதாபத்துடனும் பவ்வியமாகவும் செய்யவேண்டும். எல்லாவற்றிற்கும் மேல் "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்பதற்கிணங்க நல்ல சற்பாத்திரம் தானா என்று அறிந்து கொடுக்க வேண்டும்.

இராமாயாணத்தில் அஸ்வமேத யாகம் செய்யும் பொழுது அன்னதானம் செய்தார்கள். அந்த வைபவத்தைச் சக்கரவர்த்தியான தசரதரே தான் கவனித்து வந்தாராம்.

"தீயதாம் அன்னம் தீயதாம்" என்று மேலும் மேலும் அன்னத்தைக் கொடு என தசரதர் கூறுகிறார்.

ஐரோப்பாக் கண்டத்தில் இலண்டன் ஸ்ரீசெல்வ விநாயக ஆலயத்தில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை களில் ஒவ்வொரு மாதங்களின் விசேட தினங்களிலும் (வருடப்பிறப்பு, தைப்பொங்கல், தைப்பூசம், சிவராத்திரி, சித்திராப்பௌர்ணமி, ஆடி அமாவாசை, ஆவணி சதுர்த்தி, கந்தசஷ்டி இன்னும் பல) அன்னதானம் வழங்கப்படுகிறது. இவ்வாலய ஸ்தாபகர் தொடர்ந்து மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் வெகு சிறப்பாக அன்னதானத்தை தன் நேரடிப்பார்வையில் வழங்க ஏற்பாடு செய்திருப்பது சிறப்பாகும்.

அன்னதானத்தைச் சிரத்தையாக செய்தால் அதிகப் பலன்களையடைவது திண்ணமாகும். உலகை ஆட்டிப்படைக்கின்ற கிரகமான சனிபகவான் அனுக்கிரகத்தைப் பெறுவதுடன் ஜாதகத்தில் சனீஸ்வரரின் கொடிய பார்வையின் காரணமாகவும் சனி மகாதிசை ஏழரைச்சனி அ்'டமத்துச்சனி இவையால் ஏற்படும் அசுப(கெட்ட) பலன்கள் இன்னல்கள் இவற்றிலிருந்து அன்னதானம் என்ற உன்னத தானத்தைச் செய்வதன் மூலம் விடுபடலாம். சகல புண்ணிய தீர்த்தங்களும் அட்ட திக்குப் பாலகர்களும், முப்பத்து முக்கோடி தேவர்களும், பூமி மற்றும் நான்கு வேதங்களும் உப நிடதங்களும், ஸஜீக்தங்களும், ஐஸ்வரியத்தையளிக்கும் (மஹாலச்சுமி) தேவியும் தர்மதேவதைகள் அனைவரும் அன்னதானம் செய்வதனால் மிகவும் மகிழ்ச்சியடைகின்றார்கள்.இவ்வுலகில் தோன்றிய ஒவ்வொருவரும் அதற்கு அடையாளமாக ஏதேனும் நன்மை செய்வது அவசியம். இல்லையேல் மனிதப்பிறவியின் பயன்கிட்டாது. மனித வாழ்க்கையே பிறருக்கு உபகாரம் செய்வதற்காகத்தான் தரப்பட்டிருக்கிறது. அந்த வாய்ப்பை வீணாக்கிவிடாமல் பாவம் செய்த ஒருவன் தன் தவற்றை உணர்ந்து பாவமன்னிப்புப்பெற பிராயச்சித்தம் செய்யவேண்டும்.

- 38ம் பக்கம் தொடரும்




சகலவிதமான மளிகைப்பொருட்கள், இலங்கை இந்திய மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், உள்நாட்டு, வெளிநாட்டு மதுபானங்கள் குளிர்பானங்கள், என்பவற்றை நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.




**No:273 - 275**
**Ilford Lane,**
**Ilford**
**Essex IG1 2SD**
**Tel:**
**020 8514 2356**




# KUKAS

337 Ley Street
Ilford Essex IG1 4AX
Tel: 020 8478 0680
Fax: 020 8594 6885
Contact:
Kukan: 07960 448 929

இறைவனின் எண்ணிறைந்த ஆற்றல்களில் "இடையூறு களைதல்" என்பதும் ஒன்றாகும். அந்த ஆற்றலின் ஒட்டுமொத்த உருவமே விநாயகர். இவருடைய திருவுருவம் ஆழ்ந்த சிந்தனையின் வெளிப்பாடு. ஓங்காரத்தின் வடிவமாக விளங்கும் விநாயகரின் ஒடிந்த தந்தம், கிரீடம், ஒடியாத மருப்பு, துதிக்கை, பேழைவயிறு இவற்றை எண்ணம் எனும் கோட்டால் இணைத்தால் கிடைப்பது கரிமுகனின் வடிவம்.

திருவுருவத்தில் அமைந்துள்ள நான்கு திருக்கரங்கள் அமரர் கூறாகவும், வேழமுகம் வலங்கின் கூறாகவும், பேழை வயிறும் குறுங்கால்களும் பூதக்கூறாகவும், வலது பாகத்தில் தந்தம் இன்மை பெண்ணாகவும், இடப்பாகத்தில் தந்தமுள்ளவை ஆணாகவும் கொண்டு உலகிலுள்ள அனைத்துப் பொருட்களும் (அ∴றிணை, உயர்திணை) தன்னுள் அடக்கம் எனச் சொல்லாமற் சொல்லும் விந்தைமிகு வடிவமுடையவராக விநாயகர் விளங்குகிறார்.

திருவடிகள் கரிமுகனாகிய விநாயகனின் சுழல்கள் இரண்டுமே ஞானத்தின் நிலைக்களன். அவை வந்த வினையையும், வருகின்ற வினையையும் போக்கும் திறம்படைத்தவர். யானையானது தன் காலிலே அடி வைப்பவனை முடிமீது ஏற்றும் அதுபோல் ஆனைமுகனின் அடிதாழ்பவர்களை அவன் மோட்ச உலகத்திற்கு ஏற்றுவான்.

பேழை வயிறு: பிரமாண்டங்கள் அனைத்தும் அவனுள் அடக்கம் என்பதைக் குறிக்கிறது. : இது உதர பந்தனமாகப் பயன்படுகிறது. மூலாதாரத்தின் நாயகன் விநாயகர். மூலாதாரத்தில் மூன்றரைச் சுற்றுள்ள பாம்பு வடிவமாக குண்டலினி சக்தி உறங்குகிறது. இதனைக் குறிக்கும் முகமாகவே விநாயகர் பாம்மை வயிற்றிலே அணிந்திருக்கிறார்.: தன்னை அடைந்தவர்களைக் காக்க ஒரு கரம் அபயமாகவும், பூரணத்திலிருந்து (முழுமை) பூரணத்தை எடுத்தாலும் மீதமாகவுள்ளதும் பூரணமே என்ற மகாவாக்கியத்தின் பொருளை விளக்கும் மோதகத்தை ஒரு கரத்திலும், உயிர்களைப் பிடித்துள்ள பாசத்தை அடக்கும் கரமாக ஒரு கரமும், மதம் பிடித்துள்ள யானையை அடக்கும் அங்குசப் படையை ஆன்மாவைப் பற்றியுள்ள அகப்பகையை ஒடுக்கும் முகமாக ஒரு கரத்தில் தாங்கியும், உலகின் எந்த மூலையிலிருந்தாலும் தனது அடியவர்களிடம் அன்பென நீண்டு அவர்களைப் பற்றிக் காக்கும் ஊறு உணர்ச்சிமிக்க துதிக்கரமாக ஐங்கரனாக விளங்குகிறான் பிரணவப் பெரியோன். ஐந்தாம் வேதமெனப் போற்றப்படும் அறக்கருத்துக்களின் நிலைக்களமான மகாபாரதத்தை எழுதும் பொருட்டு தனது விலைமதிக்கவொண்ணா வலது கொம்பை ஒடித்து எழுத்தாணியாக்கினார் விநாயகர். இது இவ்வுலகில் அறம் நிலைத்து தர்மசிந்தனை மேலோங்க வேண்டும் என்ற அவரின் தியாக மனப்பான்மையைப் பிரதிபலிக்கிறது.: சுளகு போன்ற அகன்ற செவிகள் உயிர்களின் மனவெப்பத்தைத் தணிக்கிறது. மேலும் சுளகு தன்னிடம் சேர்ந்த பொருள்களில் தீயதைப் போக்கி நல்லதையே தங்கவைத்துக் கொள்வது போல விநாயகரின் செவிகளும் தீவினையகற்றி நல்வினையைப் பரப்புவதை உணர்த்துகின்றது.

நன்றி : விவேகானந்தன் 2000



# விநாயகப்பெருமானின் திருநாமங்கள்

விநாயகப் பெருமானுக்கு எண்ணற்ற திருநாமங்கள் வழங்கப்படுகின்றன. அவற்றில் முக்கியமான சில திருநாமங்களும் அந்நாமங்கள் அவருக்கு ஏற்பட்டதற்கான காரணகாரியங்களும் வருமாறு:

**விநாயகர் :** தனக்கு மேலே தலைவரின்றி தானே ஏக தலைவனாக விளங்குபவர்.

**கணபதி :** பூத கணங்களுக்குத் தலைவர்.

**விக்னேஸ்வரர் :** தன்னைப் பக்தி சிரத்தையுடன் வணங்கும் அடியவர்களின் இடையூறுகளை (விக்கினங்களைக்) களைபவர்.

**கணேசர் :** ஞானநெறியில் நின்று எய்தப்பெறும் பரம்பொருள்.

**ஏகதந்தா :** அளவில்லாத பேராற்றல் உடையவர்.

**ஏரம்பா :** பலவீனர்களை இடையூறிலிருந்து காப்பவர்.

**லம்போதரா :** அனைத்து உலகங்களையும் இடையூறுகளிலிருந்து பாதுகாக்கும் சரிந்த தொந்தியுடையவர்.

**கஜானனர், சூர்ப்பகர்ணர்:** அடியார்களின் இடையூறுகளை நீக்கி அவர்களுக்கு அருள் புரிந்து உண்மை ஞானத்தையடைய உதவுபவர்.

**குகாக்கிரசர், ஸ்கந்தபூர்வசா:** முருகனுக்கு முன் பிறந்தவர்.

**துஷாமகேது :** துஷாமன் என்னும் அரக்கனைக் கேதுபோல் அடக்கியாண்டு ஞானம் நல்கியவர்.

**விக்னராசர், விக்னவிநாயகர் :** இடையூறுகளை அடக்கி ஆள்பவர்.

**விக்டர் :** விநாயகர் ஆடிய விகடக்கூத்துக் காரணமாக ஏற்பட்டது.

**பிள்ளையார் :** பார்வதிக்குப் பிள்ளை என்பதால் ஏற்பட்டது.

**Finest**
**Indian & Chinese**
**Cuisine - Now Open**

East Ham High Street இல் நவீன வசதிகளுடன் கூடிய உயர்தர உணவகம்

# sathiyams

*Fully Licensed* *Air-conditioned*

*Classical Indian & Chinese Restaurant & Banqueting*

இந்திய மற்றும் சீன உணவு வகைகள்
200 பேர் வரை அமர்வதற்கேற்ற இட வசதி
பிறந்தநாள் மற்றும் இதர கொண்டாட்டங்களுக்கு
ஏற்ற சகல வசதிகளும் செய்து தரப்படும்.
குடும்பத்தோடு அமர்ந்து உண்பதற்கேற்ற இதமான சூழல்
அகில இந்திய புகழ்பெற்ற சமயற்கலை நிபுணர்களின் உயர்தர சேவை

Deliicious Indian & Chinese food available
Up to 200 seating capacity
Highly facilitated bangueting Hall available for Birthday parties, conferences & other occasions
Ideal place for family eating out
Enjoy the dishes prepared by award winning chefs

sathiyams
*... a tasteful promise*



*Open 11am to Till late*

**379 - 381 High St North, Manor Park**
**London E12 6PG**
**Tel: 020 8552 0777**

*... a tasteful promise*

Designed & Printed by: Print Tone - 020 8552 0299

# இந்து நாகரிகத்தில் காணபத்திய நெறி

கணபதியை முழுமுதலாக வழிபடும் நெறியினர் காணபத்திய நெறியனராவர். இவ்வழிபாட்டு மரபு பாரத தேசம் மட்டுமல்லாது ஈழ நாட்டிலும், பர்மா. தாய்லாந்து, பாலித்தீவு, போர்ணியோ, கம்போடியா, சீனா, யப்பான் போன்ற நாடுகளிலும் பரவியிருந்தமை குறிப்பிடக்கூடியதாகும். தென் அமெரிக்கக் கண்டங்களில் கூட இவ்வழிபாடு நிலவியதாக கூறப்படுகிறது. இவ்வழிபாடு பல்வேறு நாடுகளுக்கும் பிரதேசங்களுக்கும் பரவக் காரணமாகியவர்கள் வர்த்தகர்களேயாவர். இவர்கள் தாம் செல்வம் சேர்க்க சென்ற இடமெல்லாம் ஆபத் பாந்தவனாகிய யானை முகனின் திருவுருவத்தை எடுத்துச் சென்று வைத்து வழிபட்டுள்ளனர். இதற்கு எடுத்துக் காட்டாக வட இந்தியப் படையினர் திருகோணமலைத் துறைமுகத்தில் நிறுவிய பிள்ளையார் கோவிலைக் குறிப்பிடலாம்.

விநாயகர் என்பது கணபதிக்குரிய மறுபெயர்களில் ஒன்றாகும். வி - இன்மை, நாயகர்-தலைவர் தமக்கு மேல் தலைவர் இல்லாதவர் என்பது விநாயகரின் பொருளாகும். கணபதி என்றால் கணங்களுக்கு அதிபதி அல்லது கணங்களின் தலைவன் எனப்பொருள். விக்கினங்களை களைபவன் என்பதனால் விக்கினேஸ்வரன் எனப்படுகின்றான். ஒற்றை மருப்பை உடையவன் ஆதலால் ஏக தந்தன் எனப் பெயர் பெறுகின்றான்.யானை முகத்தையுடையதால் ஆனைமுகன், கஜானனன், வேழமுகத்தோன் எனவும் அழைப்பர். பிள்ளையார் என்பது குழந்தைக் கடவுள் என்பதை உணர்த்துவதாகும்.

பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் என்பது ஆன்றோர் வாக்கு. பிரணவ மந்திரமாகிய ஓங்கார வடிவ-னனாக விநாயகரின் உருவம் அமைவதால் ஓங்காரரூபன் என வழிபடவர் மந்திரங்களில் முதன்மையானது பிரணவம் இதனாலேயே எல்லா மந்திர உச்சாடனங்களின் முன்பும் ஓம் முன்னதாகச் சேர்க்கப்படுகின்றது. அகரம், உகரம், மகரம் இவற்றின் கூட்டொலியே ஓங்காரம். சிவதத்துவங்களில் இவை முறையே சிவம்,சக்தி, நாதம் என்பவற்றைக் குறிக்கும். சிவனைப்போல விநாயகனுக்கும் முக்கண்கள் உண்டு. எனவே விநாயகனுக்கு முக்கண்ணன் என்ற பெயரும் வழங்கப்படுகின்றது.

அறுவகைச் சமய நெறிகளான வைதீக சமயங்கள் ஆறிலும் பிள்ளையாருக்கே முதலில் பூஜை செய்யப்படுகின்றது. விநாயகரின் முக்கண்களும் சூரியன், சந்திரன். அக்கினி ஆகிய முச்சுடர்களாம். இவருடன் இச்சாசக்தி, கிரியாசக்தி ஆகிய இரு சக்திகளும் ஞானசக்தியாகிய விநாயகரும் இணைந்து உலகை இயக்குவதாக கூறப்படுகிறது, இந்நெறியினர் இவரை பஞ்சபூதங்களின் அதிபதியாகவும் வழிபடுவர். அவற்றிற்கு மூலசக்தியாகிய நிர்குணப் பிரம்மத்தின் சகுண வடிவமாகவும் கருதி அத்துடன் தன்னுள் பிரணவத்தை அடக்கியவராகவும் வழிபடுவார்கள். இவரை வழிபட்டால் சிவன், சக்தி, விஷ்ணு, சூரியன் ஆகியோரின் பேரருளைப் பெறலாம். உலகின் முக்கிய நிகழ்வுகளில் முன்னுரிமை வழிபாடு விநாயகருக்கே உரியது. இவரை வணங்காது தொடங்கும் காரியங்கள் இடையில் தடைப்பட்டுவிடுமெனக் கூறுவர். இதற்குச் சான்றாக சில புராணக்கதைகளும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. வரலாற்றை நாம் நோக்கும் போது மக்களின் குறைகளையும் இடர்களையும் போக்கவே சிவபிரான் இவரை உலகிற்கு அளித்தாரெனக் கூறப்படுகிறது.

உலகங்களைத் தோற்றுவிக்க கடவுள் முதற்கண் ஒலியாகவும் பின் ஒளியாகவும் தன் சக்தியை உருவப்படுத்தினார். ஒலியாக விளங்கும் முதல் ஒலி பிரணவமாகியது. பிரணவத்தை தன் கடைக்கண் பார்வைக்குட்படுத்த உலகம் ஒடுங்கும் வரை அதிர்ந்து உள்ளொளியாக நாத தத்துவத்தின் அடிப்படையாக விளங்குவதும் இதுவேயாகும். உலகத்திற்கு முன் தோன்றிய ஓங்காரம் திருமுகமாகவும் உலகங்களின் தொகுப்பாய் பெருவயிறும் உலகைத்தாங்கும் ஆற்றல் திருவடிகளாகவும் அமைந்ததே விநாயகரின் உருவமாகும்.

எல்லா ஒலிகளிலும் முற்பட்ட ஓங்காரத்தினின்றும் எழுத்தொலிகளை எல்லாம் வகுத்து கலைகளை வளர்ப்பவர் என்பதனால் இவரது ஒற்றை மருப்பு திருக்கரத்தில் உண்டு. மகாபாரதக் கதையை இவர் மகாமேரு மலையில் எழுதியதாகவும் கூறப்படுகிறது. "முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில் முற்பட எழுதிய முதல்வோனே" எனத் திருப்புகழ் இவ்வுண்மையை வற்புறுத்துகிறது.

" சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப்புஜம்
பிரசன்ன வதனம் தியாயே
சர்வ விக்னோபசாந்தயே"

என்பது பிள்ளையார் சுலோகம். சுக்ல அம்பரம் என்பது அவரது உடை வெள்ளை என்பதையும் வி'ணு என்ற சொல்லிற்கு எங்கும் நிறைந்தவர் என்றும் சசிவர்ணம் சந்திர நிறத்தை(வர்ணத்தை) உடையவரென்றும் சதுர்பஜம் நான்கு திருக்கைகளை உடையவர் என்றும் பிரசன்ன வதனம் என்னும் மகிழ்ச்சியை தரும் யானை முகம் உடையவர் இவரைத் தியானித்தால் எல்லா விக்கினங்களும் நீங்கும். இந்தச் சுலோகத்தை எந்தப் பூசையையோ, சடங்கையோ, கருமத்தையோ தொடங்கமுன் கூறுவர்.

"விநாயகனே வெவ்வினையும் வேரறுக்க வல்லான்..... எனும் கபிலதேவ நாயனாரின் பாடலில் பிள்ளையாரை வழிபட்டால் முத்தி சித்திக்கும் என்ற கருத்துடையது. ஐந்து கரங்களும் பஞ்ச கிரித்தியங்களைக்(ஐந்தொழிலை) குறிக்கும் எனச் சிலர் கூறுவர். கைவிலுள்ள மோதகம் 42ம் பக்கம் பார்க்க

# SARAVANAA BHAVAN


(INDIAN VEGETARIAN RESTAURANT & TAKE AWAY)

300, High Street North,
Manor Park, London, E12 6SA
**Ph: 020 8552 4677**

531-533, Wembley High Road
Wembley, Middlesex, London, HA0 2DJ
**Ph: 020 8900 0777**

INDIA • UAE • USA • UK • CANADA • MALAYSIA • SINGAPORE • OMAN • SRILANKA

**நற்சுவைக்கும் தரமான உடனுக்குடன்
தயாரிக்கப்பட்ட தாயக மணம் வீசும் உணவு
வகைகளை குடும்பத்துடன் வந்து குதூகலித்து
உண்டு மகிழ்ந்திட நாடுங்கள் சரவணபவன்**



அகிலமெங்கும் கிளைபரப்பி
அறுசுவையின் ஆற்றலினை
எம்மவரும் மற்றவரும்
ஆர்வமுடன் உண்டு மகிழ
சேவை செய்யும் உணவகம் தான்

# சரவண பவன்

வயிற்றினுள் வைத்துப் பாதுகாக்கும் உலகத்தின் அடையாளம். மேற்கரத்திலுள்ள அங்குசம் உயிர்களின் செருக்கை அடைக்கும் ஆற்றலைக் குறிக்கும். மற்றொரு கரத்திலுள்ள பாசகயிறு எல்லாவற்றையும் ஒருவழிப்படுத்தி ஒழுங்குபடுத்தும் ஆற்றலைக் குறிக்கிறது. திருச்செவியின் அசைவு இவ்வுலகு சுழலும் போது அதனை வரம்புக்குட்படுத்துவது என கல்லாடம் எனும் தமிழ் நுஷாலில் குறிப்பு வருகிறது. அழிவு சக்திகளை அடக்கியாளும் திறமையுள்ளவராதலால் அழிவு சக்திக்கு அடையாளமாக பெருச்சாளி அவரது வாகனமாகிறது. கஜமுகன் என்ற அசுரன் தேவர்களுக்குத் துன்பம் விளைவித்தான். அவ்வசுரனை அழித்து அவனையே தன்னுடைய வாகனம் ஆக்கினார். அவ்வசுரனை அழிக்கவே ஒற்றை மருப்பை அவன் மீது வீசியதாகவும் கூறப்படுகிறது. கணேசபுராணம், கணேசகதை, பவி'புராணம் விநாயகபுராணம், பிள்ளையார் கதை, பெருங்கதை, திருவிளையாடல் புராணம், கந்தபுராணம் இவற்றிலெல்லாம் விநாயகர் மகிமை போற்றப்படுகின்றது.
கதிரவன் சிங்க இராசியில் இருக்கும் ஆவணி மாதமே ஆண்டின் முதன் மாதமாக கருதப்பட்ட காலத்தில் ஓங்கார தெய்வவழிபாடு சிறப்பாக நடைபெற்றது என்பது அறிஞர் கருத்து என பேராசிரியர் கா. சுப்பிரமண-ியம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். விநாயக சதுர்த்தியும் ஆவணி மாத சுக்ல பட்ச சதர்த்தி(வளர்பிறை நான்காம் நாள்) கொண்டாடப்படுகிறது. அன்று நோன்பிருந்து அறுகம்புல்லால் பூசை செய்தல் சர்வமும் சித்திக்கும். இது தவிர கார்த்திக மாதத்துத் தேய்பிறை முதலாம் நாள் தொடங்கி மார்கழி மாதத்து வளர்பிறை ஆறாம் நாள் வரை இருபத்தொரு நாட்கள் இருபத்தோரிழை எடுத்து காப்புக் கட்டி விநாயகர் சஷ்டி விரதத்தை அனு'டித்து பேறுபெற்றோர் பற்றி பெருங்கதை பிள்ளையார் கதை என்பன கூறுகின்றன.
காலவரலாற்று ரீதியில் சங்கமருவிய காலப் பிறபகுதியின் பின்னரே இவ்வழிபாடு அதிகமாகியது. பல்லவர் காலத்தின் சோழ நாயக்கர் கால நுஷால்களிலேயே விநாயகருக்கு முதல் வணக்கப்பாடல் பாடும் முறை வழக்கத்துக்கு வந்ததென்பர். பௌத்த மதத்தினர் கூட “கணபதி தெய்யோ” எனக் குறிப்பிட்டு வணங்குவர் ஈழத்தில் யாழ்ப்பாணத்தில் இவ்வழிபாடு சிறப்புறக் காரணமானவர் மாருதபுரவீக வல்லி என்பவராவார், கொல்லன் கலட்டி, பன்னசாலை, கும்பாவளை, ஆலங்குழாய், கல்வளை, உடுப்பிட்டி போன்ற இடங்களில் புராதன விநாயகராலயங்களுள். இது தவிர பரராசசேக மன்னன் கட்டிய இணுவில் பிள்ளையார், அரசகேசரி நீர்வேலியில் அமைத்த பிள்ளையார் கருணாகர தொண்டமானின் தளபதி யாழில் பல இடங்களில் அமைத்த பிள்ளையார் ஆலயங்களும் பிரசித்தி பெற்றவை. நல்லுஷாரிலுள்ள வெயிலுகந்த பிள்ளையார் ஆலயம் என்பனவும் குறிப்பிடக்கூடியவை.
எமது மாவட்டத்திலே ஊற்றங்கரை சித்திவிநாயகர் ஆலயம், முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலயம், குமுழமுனை கொட்டி விநாயகர் அலயம், புதுக்குடியிருப்பு உலகாந்தப் பிள்ளையார், மந்துவில் பிள்ளையார், மம்மில் விநாயகர் ஆலயம் என்பன பழமையும் அற்புத புதுமையுமுள்ள சிறந்த விநாயகர் ஆலயங்கள். ஈழத்தில் பல இடங்களில் புராதன சிவாலயங்களில் விநாயகர் உருவம் அமைக்கப்பட்டு வழிபாடாற்றப்பட்டது. அனுராதபுரம் பொலநறுவை போன்ற இடங்களில் அழிபாடுகளிடையே பல விநாயக உருவங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. பொலநறுவையில் கண்டெடுத்த பஞ்சலோக விநாயகர் விக்கிரகம் போன்று வேறெங்கும் இல்லை என கலை நிபுணர்கள் கூறுகிறார்கள்.
இவ்வுருவம் 32 அடி உயரமானது அழகிய தாரை ஆசனத்தில் விநாயகர் வீற்றிருப்பதாக இது அமைக்கப்பட்டுள்ளது. இதன் கலை நுணுக்கவேலைப்பாடுகள் புராதன தொன்மைச் சிறப்பை எடுத்துக் காட்டுவதாக ஆய்வாளர் கூறுகின்றனர். இந்தியாவிலே மகாராஷ்டிர பிரதேச மக்கள் கணபதி வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடுடையவர்களாவர். இன்றும் கணபதிக்கு பெருவிழாக்கள் எடுக்கின்றனர். பார்வதி பரமேஸ்வரனின் மூத்த பிள்ளை என்பதால் பிள்ளையார் என உபசாரம் செய்கின்றனர். கணேசன் என்பதில் க - மனோவாக்குகளை ண - கடந்தநிலை, ஈசன் - இறைவன் என்பதால் மனோவாக்குகளைக் கடந்து நிற்கும் இறைவன் கணேசன் ஆவான். கணபதி என்பதிலும் க - ஞானம், ண - மோட்சம், பதி - இருப்பிடம் என்றும் பொருள் கொண்டால் அறிவிற்கும் வீடு பேற்றிற்கும் உரிய கடவுள் கணபதியாகும்.
பிள்ளையார் சுழி(உ) ஓங்காரத்தின் சுருங்கிய வடிவம் என அறிஞர்கள் கருதுகின்றனர். ஒலி வடிவமாகிய வட்டமும் வரிவடிவமாகிய கோடும் சேர்ந்து பிள்ளையார் சுழி ஆக்கப்பட்டது(0 -). விநாயகரது மகிமையைப் பின்வரும் சுலோகம் எடுத்துக் கூறுகிறது. அதனைக் கூறி விநாயகரை வழிபடுவோம் நன்மைகள் பெறுவோம்.

“ஓங்காரம் பிந்து சம்யுக்தம்
நித்ய யஜந்தி யோகின
காமதம் மோசதம் சைவ
ஓங்காராய நமோ நமக”

புன்னியுடன் கூடிய ஓங்காரத்தை தினமும் யோகிகள் போற்றி வழிபடுவர் காமத்தை அழித்து மோட்சத்தை அளிக்க வல்ல ஓங்காரத்துக்கு வணக்கம்.

“ஓம் கஜானனாய வித்மஹே
வக்ர துண்டாய தீமஹி
தந்நோ தந்திப்ரசோதயாத்”
என்பது கணபதி காயத்திரி.

நன்றி...

# GREENWAY PROPERTIES

## SALES LETTING COMMERCIAL MORTGAGES

### COMMERCIAL PROPERTIES CONSULTANT

**We have wide range of business for sale to suite every one in the community**

* **Restaurant/ Take away**
* **Internet Shops**
* **Chicken Shops**
* **Ware Houses**
* **Freehold Plots with Planning permission**
* **Planning Application submitted for various projects**



**Please Contact**
**Ali on 020 85144 833**
**or Mobile: 07939 528 461**

**335 Ley Street**
**Ilford Essex IG1 4AA**
**Fax: 020 8471 4928**

# பிரணவமும் பிள்ளையார் சுழியும்

ஓங்காரம் பரம்பொருளை உணர்த்தும் சொல். இதற்கு உயர்த்துவது என்றும் பொருளுண்டு. ஒருமுறை விதிப்படி உச்சரித்தால் உச்சரித்தவரை உயர்வுற உயர்ந்தகதியில் சேர்ப்பது என்பது கருத்து. உபதேசம் பெற்ற ஆன்மா இதனை உச்சரித்த அளவில் பருவுடல், நுன்னுடல், காரணவுடல் என்ற மூன்றுடலையும் அகற்றிப் பிரகிருதி மண்டலத்திற்கு மேலே உயர்வன் என்பது விளக்கமாம்.

இந்தப் பிரணவமே வேதமூலம். இதனைத் தியானித்து அனுபூதமடைந்தவன் சாவாமூவாப் பேரின்பநிலை எய்துகிறான். இந்தப் பிரணவம் உயிர்க்குற்றங்கள் அனைத்தையும் அகற்றி அரனடிகீழ் சேர்ப்பிக்கின்றது. இதுவே எல்லா ஒலிகட்கும் மூலகாரணம். எல்லாத் தேவர்கட்கும் பிறப்பிடம். பிரணவம் ஐந்தெழுத்துக்களுடைய கூட்டம். முதல் உரு நட்சத்திர வடிவு அதாவது வட்டப்புள்ளி ஆகும். இரண்டாம் வடிவு தண்டம் போலப் படுக்கையிற் கிடக்கும் நேர்கோடு ஆகும். மூன்றாம் உரு வட்டமாகும். நான்காம் உரு பிறைமதியாகும். ஐந்தாம் உருவாகிய பிந்துவாகும் இது புள்ளி வடிவு. இவற்றுள் வட்டப்புள்ளியும் நேர்கோடும் சேர்ந்து பிள்ளையார் சுழியாகிறது. இந்தச்சுழியை இட்டாலே போதும் அதுவே பிள்ளையார் வணக்கம் ஆகிவிடுகிறது.

முன்னர் காட்டிய வண்ணம் ஒலிவடிவிலும் வரிவடிவிலும் ஐந்தின் கூட்டாகிய பிரணவத்தின் அகரம் சிவன், உகரம் சக்தி, மகரம் மலம், நாதம் மாயை, பிந்து உயர்,இவற்றுள் அகர உகர வடிவமாக உள்ள பிள்ளையார் சுழி சிவ சக்திகளின் சேர்க்கையாகும். அகாரமாகிய உயிர், உகாரமாகிய இறைவனோடு இயைந்து அகாரமாகிய உயிர் வடிவமற்று உகார வடிவே வடிவாய்பிள்ளையார் சுழியாய் அத்துவிதமாய் நிற்கும் சுத்தாத்துவித சித்தாந்த முத்தி நிலையைத் தெரிவிக்கும் குறியீடாகும்.

பிரணவத்தின் ஐந்து கூறுகளுக்கும் உரிய அதிதேவதைகள் இன்னார் இன்னார் என்று கூற வந்த சிவஞானபோதம் அகரத்திற்குப் பிரமனையும், உகரத்திற்குத் திருமாலையும், மகரத்திற்கு உருத்திரனையும் பிந்துவிற்கு மகேசனையும், நாதத்திற்கு சதாசிவனையும் கூறியுள்ளது. இதனையும் நம் மனதிற்கொண்டு பிள்ளையார் சுழியைப் பார்ப்போம். எழுதத்தொடங்குவது என்பது இலக்கிய சிருஷ்டி. அதற்கு முன் பிரமனை அதிதெய்வமாகக் கொண்ட அகரத்தின் கூறாகிய இதனையும், தோன்றிய இலக்கியம் நின்று நிலவுதற்பொருட்டுத் திருமாலை அதிதெய்வமாகக் கொண்ட உகரத்தின் கூறாகிய இதனையும் இணைத்து உ என பிள்ளையார் சுழியாக எழுதுகிறோம்.

வட்டம் தகாரம் ஆகும். படுக்கையான நேர்கோடு மகாரம். இது சிகரம், பிறைமதி வகாரம் என்பது பிந்து யகாரம், இவை திருவைந்தெழுத்தின் வடிவு. இவற்றில் வட்ட வடிவாகிய தகாரமும், கோட்டு வடிவாகிய மகாரமும் சேர்ந்த பிள்ளையார் சுழி "நம" என்பதன் வடிவாகும். இதற்கு வணக்கம் என்பது வணக்கமானது ஆணவத்தின் விளைவாக தற்போதமடங்கித் தான் சிற்றறிவும், சிறு தொழிலும் உடையவன். முற்றறிவும் முற்றுத் தொழிலும் உடைய பரம்பொருளின் உடைமை என்பதை அறிந்து அடக்கியிருத்தல். பிள்ளையார் சுழியை இட்டால் பசு போதம் அடங்கிப் போக பதிபோதம் ஏற்படுகிறது.எனவே உலகத்தை இயக்கும் முழு முதற்சக்தியை வெளிப்படுத்தும் தெய்வீக குறியீடாக பிள்ளையார் சுழி விளங்குகிறது.

**நன்றி : ஸ்ரீ. பஞ்சாட்சர விநாயகர் ஆலயமஹா கும்பாபிசேக மலர்**

# தேர்த்திருவிழா

"சம்ஹாரம்" என்ற தத்துவத்தின் அடிப்படையில் எழுந்ததே இரதோற்சவம் எனப்படும் தேர்த்திருவிழா ஆகும். சம்ஹாரம் என்றால் அழிப்பது என்று பொருளல்ல, நன்றாக ஒடுக்குவது என்று பொருளாகும். ஹாரம் என்பதே சம்ஹாரமாகியது. நன்றாக மலர்ந்த மலர்களை நாரின் துணையினாலே ஒடுக்கி அமைப்பது ஹாரம்(மாலை) ஆகும். ஹாரம் என்ற சொல் "ஹ்ரு" என்ற வித்தின் வழியாக விளைந்தது. ஹ்ரு என்பதற்கு ஒடுக்குதல் என்று பொருளாகும். இதனால் சம்ஹாரம் என்ற சொல்லானது நன்றாக ஒடுக்குவது என்ற பொருளைத் தருகிறது.

அழிப்பது என்பது ஒன்றை அது இருந்த இடம் இல்லாமல் செய்வது. ஆனால் சம்ஹாரம் என்ற சொல்லில் உள்ள ஹாரம் என்பதன் பொருளான ஒடுக்குதல் என்பது தன் முனைப்புக் காரணமாக ஆணவம் கொண்டுள்ள உயிர்களைத் "திருவருள்" என்ற நாரினால் ஒடுக்குவது என அர்த்தம் பெறும்.

இறைவன் திருவருளிலே உயிர்களை ஒன்றச் செய்யும் தேர்விழா மிக மிகச் சிறப்புவாய்ந்ததாகும். கடோப நிதம் மனித உடலையே தேராகவும் உயிரைத் தேர்த் தலைவனாகவும் புலன்களைப் பரிகளாகவும் புத்தியைத் தேர்ப்பாகனாகவும் உலக விஷய சுகங்களைத் தேரோடும் வீதியாகவும் கூறப்படுகிறது. நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் என்று சைவசித்தாந்த ஞானக் கதிரவனான நாவலர் பெருமானின் வாக்கு மனிதப் பிறப்பெடுத்த ஒவ்வொருவரது சிந்தனையில் பதியத்தக்க ஒன்றாகும். "தேர்" என்னும் சொல் தமிழ் மொழியில் பெயர்ச் சொல்லாகவும் வினைச் சொல்லாகவும் வரும். வினைச்சொல்லாக வரும் பொழுது ஆராய்தல், தெரிதல், தெளிதல், சிந்தித்தல், போன்ற பொருட்களில் வரும் பொருட்களைத் தள்ளி எது நிரந்தரமான பேரின்பம் பயப்பது என்பதை உணர்ந்து கொள்வதற்கான எடுத்துக்காட்டாகத் தேர்த்திருவிழா திகழ்கிறது.

ஊர் கூடித் தேரிழுத்தல் என்பதற்கிணங்க உட்பூசல்கள், பகை, குலவேறுபாடு, இனவேறுபாடு யாவும் மறந்து மக்கள் ஒற்றுமையுடன் சங்கமிக்கும் பெருவிழாவான தேர்த்திருவிழா போற்றுதற்குரிய விழா என்பதில் ஐயத்திற்கிடமில்லை.

# GEETHAM FOOD & WINE

**315 Ley Street**

**Ilford Essex IG1 4AA**

**Tel: 020 8553 1375**

**இலங்கை இந்திய மரக்கறி வகைகள்,**

**உணவுப்பொருட்கள் மளிகைப்பொருட்கள்,**

**கடலுணவுப்பொருட்கள் மற்றும்**

**மதுபான வகைகள் எம்மிடம்**

**பெற்றுக்கொள்ளலாம்.**

# CARPET EXPRESS LTD

**FREE FITTING - FREE GRIPPERS - FREE DOOR BARS**

**LARGE SELECTION OF CARPETS AND FLOOR FLOOR COVERING OF COMPETITIVE PRICES**

**334D LEY STREET**
**ILFORD**
**ESSEX IG1 4AF**

**TEL: 020 8514 8775**
**MOBILE: 07947 361 673**

# ஆலய வழிபாடும் நாமும்



அரிது அரிது மானுடராதல் அரிது


வானிடத்தவரும் மண்மேல் வந்தரன்தனை அர்ச்சிப்பர்
மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே

இவ்வாறான பெறுவதற்கு அரியதான மானிடப்பிறவியை முன் செய்த புண்ணிய தவத்தினால் நாம் பெற்றுள்ளோம். இம்மானிடப் பிறப்பினால் வரும் பயன் சரியை, கிரியை, யோகம் ஞானம், என்னும் நான்கு பாதங்களும் நின்று இறைவனை வழிபட்டு நித்தியானந்த முத்தியை அடைதலே.

அவ்வகையில் நாம் எமது இறுதி இலட்சியமாகிய முத்தியைப் பெறுவதற்கு ஏற்ற ஒரு சிறந்த சாதனமாக விளங்குவன ஆலயங்களாகும். இவ்வாலயங்களுக்குச்சென்று இறைவனை வழிபடுவதன் மூலம் நாம் இறையருளைப்பெற்றுக்கொள்ள முடியும்.

இறைவனை நாம் ஏன் ஆலயங்களுக்குச் சென்று வழிபட வேண்டும்? ஆம் எங்கும் வியாபித்திருக்கும் இறைவனை ஆலயங்களில் கண்டு வணங்க வேண்டிய தேவை யாது ?

பசுவின் உடம்பெல்லாம் பால் செறிந்து காணப்படினும் அதன் மடியின் மூலமாகவே பாலினைப் பெற்றுக் கொள்கிறோம். நீரானது நிலத்தின் கீழ் எங்கும் பரந்து காணப்படுகின்றது. எனினும் நாம் கிணறு தோண்டி, கிணற்றிலிருந்தே நீரினைப் பெறுகின்றோம். அது போன்றதுதான், நாம் எங்கும் வியாபித்திருக்கும் இறைவனை ஆலயங்களிலே வழிபடுகின்ற முறைமையும் ஆகும். ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கும் பொருட்டுத் திருவுருவங்களில் இறைவன் எழுந்தருளியிருக்கும் இடமே ஆலயங்கள். எனின் இறைவன் இல்லாத இடங்களே கிடையாது. எனினும் ஆலய வழிபாடு இன்றியமையாததாகும்.



எம்மையெல்லாம் முத்தியாகிய கரையில் ஏற்றுங் காரணமாகவே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று வடிவாக இறைவன் விளங்குகின்றான். இவற்றை முறையாக வழிபடுவோர் உண்மை ஞானம் பெற்று முத்தியடைவர்.

**Delight, excite, Inspire.......**
**The best for bakery & confectionery**
**Delicacies**

# Cakes & Bakes

## 216 High St North
## East Ham
## London E6 2JA

**We specialize in Birthday, Wedding, Fresh Cream & Eggless Cakes**

**Open Monday to Saturday**
**From 8.00 am – 7.00 pm**

**Telephone: 0208 472 0275**

# LUCKVA
**Chartered Management Accountants**

## ACCOUNTANCY SERVICES

Accounts Preparation
Loan Mortgage Arrangement
VAT & PAYE
Book Keeping
Self Assessment
Business Advice
Management Accounts

We Specialise in small to medium size companies, Sole traders and Partnership businesses

FREE ADVICE FOR THE FIRST VISIT

T.S. Tharmalingam ACMA
Member in Practice Account & Tax Consultant

CIMA practising certificate holder

(Over 15 years completed in UK)

150 Altmore Avenue, Eastham, London E6 2BT
Tel/Fax: 020 8472 4759 Mobile: 07748 978 843
email: luckva6@hotmail.com

# விநாயகர் வழிபாட்டில் பொதிந்துள்ள தத்துவார்த்த உண்மைகள்



நமது வழிபாட்டில் விநாயகர் வழிபாடு முதன்மையாக விளங்குகிறது. விநாயகர் அடியவர்களின் விக்கினங்களை நீக்கி நல்லருள் புரிவார். இதன் காரணமாகவே எக்கருமத்தைத் தொடங்கும் முன்பும்

விநாயகரை வழிபட்டே தொடங்குவது இந்துக்களின் மரபாக இருக்கிறது.ஒரு விடயத்தை எழுத ஆரம்பிக்கும் பொழுது முதலில் எழுதுவது பிள்ளையார் சுழியாகும். அழைப்பிதழ்கள், வாழ்த்துக்கள், நூல்கள் என்பன எழுதும் பொழுது முதலில் பிள்ளையார் சுழியை எழுதிய பின்னரே எழுதுகிறோம். பிள்ளையார் சுழியின் "உ" கரம்நாதம், பிந்து ஆகிய இரண்டினதும் சேர்க்கையாகும்.

பிள்ளையாருக்கு விருப்பமானது அறுகம்புல். அறுகம்புல் ஓரிடத்தில் முளைத்தால் ஆறு இடத்தில் வேரூன்றி செழிப்பாக வளரும். அதன் காரணமாகவே நாம் வாழ்த்தும்போது "ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி" என வாழ்த்துகிறோம். அறுகம்புல்லை வேரோடு பிடுங்கக்கூடாது. முதல் ஐந்து தளிர்களைக்கொண்ட 36.108 என்ற எண்ணிக்கையில் அறுகம்புல்லை எடுத்துக் கோயில்களில் கொடுப்பது சிறப்பாகும். அறுகம்புல்லை மாலையில் நன்னீரில் ஊறவைத்து மறுநாட்காலை அந்நீரைப் பருகிவரின் சூட்டு நோய் நீங்கும். யோகிகள் யோக நிலையிலிருந்து மீண்டபின் "முலதண்டகசாயம்" அருந்துவர் எனவும் கூறுவர். பிள்ளையாருக்கு வன்னி மந்தாரை இலைகளால் அர்ச்சிப்பதும் வழக்கம். பிள்ளையாரைக் கண்ட உடனே நமது இரு கைகளினாலும் நம்மையறியாமலே தலையிற் குட்டிக்கொள்கிறோம். நெற்றியின் இரு புருவங்களிலும் குட்டும் போது குண்டலின சக்தியைத் தட்டி எழுப்புவதாக அமையும். மனம் ஒரு நிலைப்படும் அதேவேளையில் நமது பிழைகளைப் பொறுத்தருளும்படி விண்ணப்பம் செய்து கொள்ளுவதாகவும் தலையிலே குட்டி வழிபடுதல் அமைகின்றது. பிள்ளையார் சந்நிதியிலே நாம் தோப்புக்கரணம் போடுகிறோம். இதற்கு ஒரு கதையுள்ளது. ஒரு சமயம் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் சக்கரத்தைப் பிள்ளையார் விளையாட்டாக விழுங்கிவிட்டார். இதனால் ஸ்ரீ மகாவிஷ்ணு தமது இரு கரங்களாலும் காதுகளைப் பொத்தியவண்ணம் ஆடியசைந்து அங்குமிங்கும் சென்றார். இதனைக்கண்ட பிள்ளையார் வயிறு குலுங்கச் சிரிக்கச் சக்கரம் வெளிவந்தது. இதனை ஒத்ததே தோப்புக்கரணம் ஆகும். விநாயகர் என்பவர் தனக்கு மேலே ஒருவருமே இல்லாதவர் என்று பொருள். தோப்புக்கரணம் 36 108 என்ற வகையில் போடப்படுவதாகும். சாதாரணமாக மூன்றுமுறை தலையில் குட்டுவதும் மூன்றுமுறை தோப்புக்கரணம் போடுவதும் வழக்கமாகும்.

தேங்காய் உடைத்து வழிபடுவது பிள்ளையாரையேயாம். விக்கினங்கள் நீங்கவும், சர்வகாரியங்கள் நன்றே நடைபெறவும் பிள்ளையாருக்குத் தேங்காயை இரு துண்டுகளாக உடைத்து வழிபடுகின்றோம். ஒரு சமயம் பிள்ளையார் சிவபெருமானது தலையைக் கேட்டதாக ஒரு கதையுண்டு. சிவபெருமானின் முக்கண்கள் தேங்காயில் உள்ளதாக ஐதீகம்.

தேங்காயை சிதறு தேங்காயாகவும் உடைப்பர். இது கோபுர வாயிலில் தேரடியில் உடைக்கப்படுவதாகும். பெண்கள் சிதறுதேங்காய் உடைக்கக் கூடாது. அவர்கள் ஆக்கப்பணிக்காக அவதரித்த புண்ணிய சீலர்கள். கத்திகொண்டு இரு கூறுகளாகத் தேங்காயை உடைத்துப் படைப்பது உத்தமமானது. கல்லிலம் இருகூறுகளாக உடைக்கலாம்.

தேங்காயை நோக்கினால் மேல் பாகம் மட்டை தும்புகளால் கொண்டது. இவை ஆணவம் கன்மம் ஆகும். சுத்திகரித்த தேங்காயின் வைரமான ஓட்டை அதாவது மாயையை உடைத்தால் நாம் காண்பது வெள்ளையான தேங்காயையே ஆகும்.இது பரிசுத்த ஆன்மாவைக் காட்டும். தேங்காயுள் உள்ள இளநீர் அமிர்தத்திற்கு ஒப்பாகும்.

துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதத்தை தப்பாமல் பூ, மறுகம்புல் என்பவற்றைக்கொண்டு சென்று வணங்கினால் நல்வாக்கு, நல்மனம் எல்லா் நமக்குக் கிடைக்கும்.

நன்றி : குஞ்சிதபாதம்.

# JEYA VIDEO

**Audio, Video, Cd, DVDs Rental & Sales**

அனைத்து விதமான Audio, Video,
Cd,DVDs வாடகைக்கும்
விற்பனைக்கும் உண்டு.
தொலைக்காட்சி நாடகங்கள்
உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

**241C, High Street North**
**Manor Park, London E12 6SJ**
**Tel: 020 8470 0532**



EYE EXAMINATION ★ SPECTACLES ★ CONTACT LENSES

# Tel : 020 8471 2277

இலவச கண் பரிசோதனைக்கு நீங்கள் உரிமையுடையவரா?

*-Aged 60 or over / Under 16*
*-16-18 in Full time Education*
*-Receive*
*-Income Support*
*-Income Based JSA*
*-Working Families Tax Credit*
*NHS Excemption Certificate*
*-Disabled Person's Tax Credit*
*NHS Excemption Certificate*
*-HC2 Certificate*
*-Suffer from Diabetes / Glaucoma*
*Other groups also apply*

**EXPERIENCE....**


**ELITE VISION**

*Designer Frames :*

GIORGIO ARMANI · Calvin Klein · DKNY · NIKE VISION *and others*

*Contact Lenses*
*Daily-Monthly-Coloured-Disposable*

--WHERE EYECARE IS ELITE






உயர்தர கண்சேவைக்கு !
தமிழில் உரையாடி கண்களை பரிசோதனை
செய்து கொள்ளவதற்கு !
மேலும் விபரங்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

**230, High Street North**
**East Ham**

# விக்கினங்கள் நீக்கும் விநாயகர்

இறைவழிபாட்டுக் கிரியைகள் அனைத்தும் தடையின்றி முற்றுப்பெற விக்னேஸ்வரனை வழிபடுதல் அன்று தொட்டு இன்றுவரை நிலவி வருகின்ற வழக்கமாகும். இவற்றை ஆரம்பிக்கும் பொழுது விக்னேஸ்வரனை அலங்கரித்துப் பூஜித்து நாம் செய்யவிருக்கும் இன்ன கருமம் இடரின்றி நிறைவெய்த அருள் செய்யவேண்டு மென்று அவர் முன்னிலையில் சங்கற்பம் செய்தல் நம் சமய மரபாகும். இதற்கான காரணம் பற்றியும் நாம் ஆராய்ந்து பார்க்கலாம். கந்தபுராணம் விநாயகரின் திரு அவதாரம் பற்றிய செய்தியைத் தருகின்றது.

"மருகாரப் புகலுநான் மறைகளிற் றிகழுமெய்ப்
பொருளென படுமவன் புவனமுற் றவர்கள் தம்
இருளறுந் தவர்மனத் திடர்தவிர்த் தருளவோர்
அருளுருத் தனையெடுத் தவதரித் துள்ளவன்"

எனும் பாடலில் அச்செய்தி அமைந்திருக்கிறது. இவ்வாறு அவர் அவதரித்த பின்னர் சிவபெருமான் அவருக்கு எவ்வாறு அருள் செய்தார் என்பதனை வேறொரு பாடல் கூறுகின்றது.

"என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதல்
முன்னரே யுனதுதரள் முடியுறப் பணிவரேல்
அன்னர்தஞ் சிந்தைபோ லாக்குதி யலனுனை
உன்னலார் செய்கையை ஊறுசெய் திடுதி நீ"

என்பதே சிவபெருமான் பிள்ளையாருக்குக் கொடுத்த பணி. "உன்னை வழிபடுவோர் எண்ணியது எண்ணியாங்கு எய்த அருள் புரி, உன்னை நினையாதவர்கள் செய்யும் கருமங்களுக்கு ஊறுசெய்" என்பது அப்பாடலின் பொருள்.
இவ்வாறு வரங்கொடுத்தருளிய சிவபெருமான் திரிபுர தகனஞ் செய்வதற்கெனச் சிறப்பாக அமைக்கப்பட்ட தேரின் மீது எழுந்தருளினார். அப்போது தேரின் அச்சு முறிந்தது. தம் மைந்தன் விக்னேஸ்வரனை நினையாமல் தாம் செய்த அக்கருமம் தடைப்பட்டது என்பதைச் சிவபெருமான் உணர்ந்தார். எனவே அவருடைய குறையைச் சிவபெருமான் தீர்த்தார் என்பது புராணக் கதை. சைவக் கோயில்களில் நடைபெறுகின்ற கிரியைகள், பூஜைகள், திருவிழாக்கள் முதலிய அனைத்தும் பிள்ளையார் பூஜையுடன் ஆரம்பித்தலை நாம் இன்றும் காணலாம்.

நன்றி : வே. வல்லிபுரம்



**வைரவர் மடை(தேரடிப்பொங்கல்) காட்சியின் ஒரு பகுதி**

The first & best Tamil Silk house in London

6Kumars®

Silk House & Jewels

மிகப் பிரமாண்டமான அழகு காட்சியறையில்
மணமக்களுக்கு தேவையான மங்கள நாள்
கூறைப்புடவைகள், பட்டு வேட்டி குர்த்தா தலைப்பாகை
ரவுசர்கள் சேட்டுகள், சூட்கள் முதல்
வைரத்தாலிக்கொடி, நெக்லஸ், டைமன் அட்டியல்,
பூட்டுக்காப்பு தோடுகள் வரை சிறுவர் Party Dress கள்
பெற்றுக்கொள்ள நிறைந்த மலிவுடன் சிறந்த ஓர் இடம்
புதுப்பட்டுப் பொன்னகையும் புன்னகையுடன் எங்களிடம்



**285 High Street North**
**East Ham**
**London E12 6SL**
**Tel: 020 8471 5742**
**www.6kumars.com**

# LUCKY CENTRE

**Household Goods, Toiletries, Fancy Goods, Toys & Parties also hardware things available.**

**Unit 5, 289 High Street North**
**London E12 6SA**
**Tel: 020 8586 8530**



# கும்பாபிஷேகம் – ஒரு விளக்கம்

சிவஸ்ரீ. இ. சிவராமகிருஷ்ணகுருக்கள்
மாரிஅம்மன் கோவில் சிறபோன் மலேசியா



கும்பாபிஷேகம் என்பது நான்கு வகையாகின்றன. ஆவர்த்தம் அநாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரீதம் என்பன அவை. புதிதாக ஆலயம் அமைத்துப் பதிய விக்கிரகம் வைத்துப் பிரதிஷ்டை செய்வது ஆவர்த்தம் என்றும், சிதைந்த ஆலயத்தைத் திரும்பவும் கட்டி விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்வது அநாவர்த்தம் என்றும், ஸ்தூபியைப் பழுது பார்த்தும் அதில் இருக்கின்ற விக்கிரகங்களைத் திருத்தியும் பிரதிஷ்டை செய்வது புனராவர்த்தம் என்றும், ஆலயத்தினுள் தற்செயலாக மரணம் ஏற்பட்டால் திருடர்கள் புகுந்து அனர்த்தங்கள் ஏற்பட்டாலும் அதற்காக உடனடியாகச் செய்வது அந்தரீதம் எனவும் கூறப்படுகின்றன.

ஆந்தரீதக் கும்பாபிஷேகத்திற்கு நாள், நட்சத்திரம், முகூர்த்தம் என்பன பார்க்கத் தேவையில்லை. இதைப் பிராயச்சித்தக் கும்பாபிஷேகம் என்றும் அழைப்பர். இந்த வகையில் இப்போது நடைபெறுகின்ற இந்த விநாயகர் கும்பாபிஷேகம் ஆவர்த்தம் என்றே சொல்லலாம்.

கும்பத்திலே எம்பெருமானை எழுந்தருளச் செய்து யாகத்திலே பிரதான வேதிகையின் நடுவே இருத்தி வலது புறத்திலே சக்தி கும்பமும் எட்டுத்திக்குகளில் அஷ்ட வித்யேஸ்வரரையும் வைத்து பூஜித்து ஓம குண்டம் அமைத்து அதிலே சிவாக்னியை உண்டாக்கி அந்த அக்னியிலே எம்பெருமானை ஆவாகித்து மூல மந்திரத்தினாலும் காயத்ரி மந்திரத்தினாலும் சமித்து நவதானியம், நெற்பொரி அன்னம், அநய் என்பவற்றால் ஓமம் செய்து வழிபடுதல் யாகபூஜை எனப்படும்.

குடம் உடலாகவும் அதிலே சுற்றப்படுகின்ற நூல் நாடிகளாகவும் மாவிலை சடையாகவும், தேங்காய் தலையாகவும், கூர்ச்சம் கேசமாகவும், சுத்தப்படுகின்ற ஆடை தோலாகவும், நீர் இரத்தமாகவும், உள்ளே போடப்படுகின்ற நவரத்தினம்,பவுண் என்பன பிரானாகவும், மந்திரங்கள் சக்தியாகவும் அமையும் கும்பாபிஷேகத்தின் முதல் நாள் மந்திரங்களோடு நிகழும் கடஷ்தாபனம் இவற்றைத் தெளிவாகக் காட்டும்.

யாகத்திலே வைத்துப் பூஜித்த கும்பத்திலிருந்து கருவறையிலே அமைந்திருக்கின்ற எம்பெருமான் திருவுருவச் சிலைக்கும் நூல் போடப்பட்டு அஷ்டமூர்த்தி, மூர்த்தீஸ்வரர், மூர்த்தீஸ்வரி ஆகியோரை அக்னியிலே பூஜித்து ஓமம் செய்து எம்பெருமானது சிலையை இடுப்பின் கீழுள்ள பகுதியை பிரம்ம பாகமாகவும், கழுத்து முதல் இடுப்பு வரையுள்ள பகுதியை விஷ்ணு பாகமாகவும், கழுத்துக்கு மேலேயுள்ள பகுதியை ருத்ர பாகமாகவும் மூன்று பாகங்களாக வகுத்து யாகாக்னியிலே ஆதி செய்து நூலின் மூலமாக கருவறையிலே இருக்கின்ற பெருமானுக்கு மூன்று முறை சென்று ஆகுதி மூலமாக குடும்பத்திலும் அக்னியிலும் ஆவாகித்த மூர்த்தியைச் சேர்த்தல் "ஸ்பர்சாகுதி" என்று சொல்லப்படும்.

இவை முடிந்ததும் யாக கும்பத்திலே, அக்னியிலே ஆவாகனம் செய்த மூர்த்தியை சேர்த்துப் பஷ்டிபாஞ்சலி செய்து, கும்பத்திற்குத் தீபாராதனை செய்து வேத ஸ்தோத்திர தேவாரப் பாராயணம் செய்து, சர்வ மங்கள வாத்திய சகிதம் சகல விதமான ராஜ உபசாரங்களோடு வீதி வலமாக வந்து பெருமானுக்கு அபிஷேகித்தலே கும்பாபிஷேகமாகும்.

# D.P.R WHOLESALERS
# CASH & CARRY

## Supplier for the Future

As a leading wholesaler in London, we stock a vast range of House wares, Plastics, Gift Items, Seasonal goods and of course Toys and Stationery.







With close links to the A12, A406, M11 and M25 we are very easily accessible and with our friendly and helpful staff, you'll find our service hard to beat. The range we carry is second to none, holding almost 40,000 lines in many areas.

Having been in the wholesale Business for almost 12 years, ( and retail for over 20) we have developed and honed our skills and expertise in the trade. We believe in the products we sell, and are always willing to offer advice, on a product range which will best suit your needs.

**So pay us a visit, we're sure you won't be disappointed !**

**For Your Future**

Supplies of Toys &

**Stationery**

உங்களுக்கு தேவையான அனைத்து பொருட்களும் ஒரே கூரையின் கீழ்

| | |
|---|---|
| **HOUSE WARES**<br>**KITCHEN WARES**<br>**PLASTICS**<br>**GIFT ITEMS**<br>**TOYS**<br>**STATIONERY**<br>**GARDEN WARES**<br>**TOOLS** | **FROM**<br>**1st**<br>**OCTOBER**<br>**D.P.R**<br>**WHOLESALES** |

**Opening Hours**
**Monday to Friday: 09:00 - 18:00**
**Sunday : 10:00 - 14:00**
**Late Night: Tuesday & Friday until 20:00**
**Last Entry 30 min before closing**

## 12 வருடமாக சிறந்த சேவை

மற்றும் எல்லாவிதமான கொண்டாட்டங்களுக்கும் (பிறந்தநாள்) தேவையான அனைத்துப் பொருட்களும் ஒரே கூரையின் கீழ் திங்கள் முதல் வெள்ளி வரை மாலை 6 மணிவரையும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை உங்கள் வசதிக்காக தமிழ்பேசி மகிழ்விக்க தமிழ் சகோதரர்கள்.

**GROUND FLOOR,**
**1 Raven Road,**
**South Woodford,**
**London, E18 1HB**
**Phone: 0208 498 0755**
**Fax: 0208 498 0756**
**Sales@dprwholesalers.com**

**www.dprwholesales.com**

# PARTY PARADISE

## one stop தமிழ் party shop



events master


Weddings
Birthdays
Receptions
Arangetrams
Puberty – Ceremonies...

events master

Mandaps
Manavarai
Tents & Chairs
Wedding Stages
Balloons
Hall Decorations
Helium

Specialist in Manavarai & Hall Decorations





Fresh Flower Arrangements

அரங்கேற்றத்துக்குரிய பிள்ளையார், நடராஜர், சரஸ்வதி, பாவை விளக்குகள், மற்றும் Dancing Statues சரங்கள் எல்லாம் கிடைக்கும்

www.partyparadiseltd.com

133 Carlyle Road, Manor Park
London E12 6BS
Tel: 020 8553 9857 Mob: 07939 287 890

Shop
777, Romford Road, Manor Park
London E12 5AN
Tel: 0208 553 9209 Mob:07961 199 424



புதிய "பளிங்கு மணவறை"

தமிழில் "எங்கள் திருமணம்" பொறித்த பலூன்கள் கிடைக்கும்

Designed & Printed by JR PRINT Tel: 020 8503 6643 Wedsite:www.jrprint.com